பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 02 திங்கட்கிழமை (18.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 243




# மத்தியஸ்த சபையால் தீர்க்க முடியாத பிணக்கே நீதிமன்றுக்கு செல்ல முடியும்



## யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மத்தியஸ்த சபைகளின் 7 ஆம் பிரிவுக்கு அமைவாக பிணக்குகள் மத்தியஸ்த சபையினால் தீர்க்கப்பட முடியாவிட்டால் மட்டுமே முதல்நிலை நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா வட மாகாண பிரதிப் பொலிஸ் மாஅதிபர் டபிள்யூ.எஸ்.யூ.பெர்னாண்டோவுக்கு அறிவு றுத்தியுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு மூன்று நாள்கள் ஊரடங்கு தளர்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய திருவிழாவை முன்னிட்டு சப்பறம், தேர், தீர்த்தத் திருவிழா ஆகிய மூன்று நாள்களும் ஊரடங்குச் சட்டத்தை முற்றாகத் தளர்த்த இராணுவம் இணங்கியுள்ளது.

இது தொடர்பாக நேற்று நல்லை ஆதீன குரு முதல்வர் இராணுவத் தளபதியிடம் விடுத்த வேண்டுகோளையடுத்தே இவ் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது: (ச-5)

## நாச்சிக்குடாவில் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

கிளிநொச்சி நாச்சிக்குடாப் பகுதியில் விமானப் படையினர் நேற்றுத் தாக்குதல் நடத்தியதாக விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் எம்.ஐ.-24 ரகத் தாக்குதல் ஹெலிகொப்டர்களின் உதவியுடன் இந்தத் தாக்குதலை நடத்தியதாக அவர் குறிப்பிட்டார். நாச்சிக்குடாப் பகுதியில் விடுதலைப்புலிகளின் முன்னரங்குக் காவலரணிலுள்ள பதுங்கு குழிகள் தாக்குதலுக்கு இலக்கானதாகவும் இராணுவத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் விமானப் படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-5)

# 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பயணப் பாதுகாப்பு அனுமதி நீக்கம்

## முதலாம் திகதி நடைமுறைக்கு

(யாழ்ப்பாணம்)

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பாதுகாப்புப் பயண அனுமதி (கிளியறன்ஸ்) நிறுத்தப்படுவதுடன் ஏனையவர்களுக்கான பாதுகாப்புப் பயண அனுமதி தமது நேரடிக் கண்காணிப் பின் கீழ் சிரமங்களின்றி 10 நாள்களில் வழங்கப்படும் என யாழ்.இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி உறுதியளித்துள்ளார்.

இந் நடைமுறை அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பலாலிப் படைத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற சமாதானக் குழுவின் விசேட கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ்.அரச அதிபர் க. கணேஷ், நல்லை ஆதீன குருமுதல்வர், யாழ். ஆயர், சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் தலைவர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, செயலாளரும் சமூக சேவையாளருமான எஸ்.பரமநாதன் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் முன்னகர்வு முறியடிப்பு 11 படையினர் பலி; 19 பேர் படுகாயம்

(கிளிநொச்சி)

வவுனியா மாவட்டத்தில் உள்ள வட மேற்குப் பாலமோட்டை குஞ்சுக்குளத்தில் படையினர் மேற்கொண்ட பாரிய முன்னகர்வு முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் 11 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 19 பேர் காயமடைந்துள்ளனர் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

பாலமோட்டை குஞ்சுக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் படையினர் பாரிய முன்னகர்வினை மேற்கொண்டனர்.

இம் முன்னகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் பிற்பகல் 4.30 மணிவரை தீவிர தாக்குதலை நடத்தினர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஜீவன் பயிற்சித் தளம் தம் வசம் என்கிறது இராணுவம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முக்கிய பயிற்சித் தளத்தைக் கைப்பற்றியுள்ளதாக இராணுவம் கூறியுள்ளது.

. முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் ஜீவன் தளம் எனப்படும் முக்கிய பயிற்சித் தளத்தை இராணுவத்தினர் கைப்பற்றியிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

விடுதலைப்புலிகளின் பிரசித்தி பெற்ற தளமாகிய ஒன்ஃபோர் தளம் எனப்படும் முகாமின் முக்கிய பகுதிகளில் ஜீவன் தளமும் ஒன்று. கைப்பற்றப்பட்டுள்ள இந்தத் தளத்தில் ஆயிரத்து 250 (12 ஆம் பக்கம் பார்க்க)

# அடிப்படை வசதிகள் எதுவுமின்றி ஒன்றரை இலட்சம் மக்கள் அவலம்

## கிளி.சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

(கிளிநொச்சி)

வன்னிப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிராகத் தொடரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அப் பிரதேசத்தினுள் சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து மோசமான சூழ்நிலையில் வாழ்ந்து வருவதாகக் கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வீதியோரங்களில் மர நிழல்களில் பொது இடங்களில் தங்கியுள்ள இவர்கள் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருவதாகவும் இவர்களுக்குத் தேவையான அடிப்படை சுகாதார வசதிகளை வழங்குவது கடினமாகி இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் தொடர்ச்சியான எறிகணை வீச்சுக்கள், விமானக் குண்டுத் தாக்குதல்கள் காரணமாகவும் பல்வேறு பிரச்சினைகள் காரணமாகவும் உளவியல் தாக்கத்திற்கு உள்ளாகியிருப்பதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

வன்னிப் பிரதேசத்தின் நிலைமைகள் குறித்து அவர் பி.பி.சிக்குத் தெரிவித்ததாவது, வன்னிப் பிரதே (12 ஆம் பக்கம் பார்க்க)

## உணவு நஞ்சடைந்ததால் 77 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

உடப்புசல்லாவ கொட்டகல தோட்டத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உணவு விஷமடைந்ததன் காரணமாகத் திடீர் சுகவீனமுற்ற 77ற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டவர்களில் 13 வயதுச் சிறுமி ஒருவர் நேற்றுப் பகல் உயிரிழந்ததாக ஊவா பரணகம வைத்தியசாலை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

திடீரென சுகவீனமுற்ற உடப்புசல்லாவ கொட்டகலத் தோட்ட மக்கள் ஊவா பரணகம வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டனர்.

கொட்டகலத் (12 ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# சிங்கள இனவாதம் காரணமாகவே நாட்டில் பயங்கரவாதம் உருவானது

## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

சிங்கள இனவாதம் காரணமாகவே நாட்டில் பயங்கரவாதம் தோன்றியுள்ளதாக கட்டட நிர்மாண அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

குறுகிய அரசியல் லாபங்களை ஈட்டும் நோக்கில் அதிகாரப் பகிர்வுக்கு சிங்கள கடும் போக்காளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

13-வது திருத்தம் அமுல் படுத்துவதன் மூலம் படை வீரர்களது யுத்த முன்னகர்வை பலவீனப்படுத்தும் என்று ஜே.என்.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய பிரசாரம் மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இவ்வாறான பிரசாரங்கள் எந்த விதமான அடிப்படையும் அற்ற முட்டாள்தனமான பிரசாரங்களாகவே தாம் நோக்குவதாகவும் சண்டே லீடர் ஆங்கில நாளேட்டுக்கு வழங்கிய விசேட செவ்வியின்போது அமைச்சர் சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனத்துக்கு அமைவாக செயற்படுவேன் என உறுதிமொழி பூண்ட இவர்கள் இவ்வாறு அரசியல் சாசனத்தை விமர்சிப்பது தண்டிக்கப்படவேண்டிய குற்றமாகும்.

25 வருடகாலமாக நீடித்துக் கொண்டிருக்கும் யுத்தத்தை முடிபுக்குக் கொண்டுவரக் கூடிய சாத்தியங்கள் இருந்த போதிலும் இனப்பிரச்சினைக்கு யுத்த வெற்றி தீர்வாக அமையாது.

1956ஆம் ஆண்டு முதல் தெற்கின் சிங்களத் தலைமைத்துவங்கள் தமிழர் பிரச்சினைகளை சரியான முறையில் அணுகவில்லை என்பதே யதார்த்தமான நிலை.

சிங்கள இனவாதிகளின் பகிர்ந்து கொள்ளல் தொடர்பான புரிந்துணர்வின்மை காரணமாகப் பயங்கரவாதப் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அதிகாரி



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியாக வைத்திய கலாநிதி இ.பரமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய இவர் கடந்த வாரம் முதல் அங்கு பணியாற்றி வருகிறார்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் நிலவி வந்த வைத்தியர் பற்றாக்குறை இவரின் நியமனம் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

# எம்.பியின் வாகனத்தை சோதனையிடாத பொலிஸார் இருவருக்கு பணி நீக்கம்

(கொழும்பு)

மடு திருப்பதியின் ஆவணி மாதத் திருநாளாகிய 15 ஆம் திகதி அங்கு சென்ற ஐ.தே.க முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெயலத் ஜெயவர்த்தன தமது பொலிஸ் மெய்ப்பாதுகாவலர்களுடன் மதவாச்சி சோதனைச் சாவடியைக் கடந்து சென்றுபோது அவரது வாகனத்தை சோதனையிடாததுக்காக அங்கு கடமையிலிருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி உட்பட உரியஅனுமதிப்பத்திரங்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய பொலிஸ் மெய்ப்பாதுகாவலர்களுடன் மதவாச்சி சோதனைச் சாவடியூடாக மடுவுக்குச் சென்றபோதும்அங்கிருந்து திரும்பி வந்தபோதும் அவருடைய வாகனம் சோதனை செய்யப்படாமைக்கு பொறுப்பாகவிருந்த பொலிஸாரே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதி இருந்தாலும் மதவாச்சி சோதனைச் சாவடியில் அனைத்து வாகனங்களும் சோதனையிடப்பட வேண்டுமென்ற உத்தரவு அனுராதபுரம் பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த உத்தரவை செயற்படுத்த தவறினார்கள் என்பதற்காகவே இந்த பொலிஸார் இருவரும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மதவாச்சி சோதனைச் சாவடியூடாக அரசாங்க உயர் மட்டதின் அனுமதியோடும், பாஸ் பெற்றும் பல முக்கியஸ்தர்கள் பிரயாணம் செய்கிறார்கள்.

தேர்தல் பிரசாரங்களுக்குச் செல்லும் முக்கியஸ்தர்களும் இவ்வாறு செல்கின்றார்கள். இவர்களது வாகனங்களை சோதனையிடும் போது அது அவர்களுக்குப் பிடிப்பதில்லை. அவர்கள் கோபமடைகிறார்கள்.

அத்துடன் ஜெயலத் ஜெயவர்த்தன நாடறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் என்பதற்காகவே அவரது வாகனம் அனுமதிக்கப்பட்டது.

இந்த நிலையில் இவ்வாறு மதவாச்சி சோதனைச் சாவடியூடாக தமது வாகனங்களில் பிரயாணம் செய்யலாம் என அரசாங்க உயர் அதிகாரிகளும் உயர் மட்டத்தினரும் உரிய அனுமதியை வழங்குகிறார்கள்.

அவ்வாறான வாகனங்கள் சோதனையிடப்படவில்லை என்பதற்காக சாதாரண பொலிஸார் தண்டிக்கப்படுவது ஏன் என பொலிஸார் தரப்பில் கவலை வெளியிடப்பட்டுள்ளது. (ச-5)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ்.சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும் பாடுமீன் விளையாட்டக் கழகமும் வெற்றி பெற்றன.

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்துடன் மோதிய நாவாந்துறை சென்.மேரிஸ் வி.கழகம் 2:4 என்ற கோல் கணக்கிலும் யாழ்.பல்கலைக்கழக அணியுடன் மோதிய பாடுமீன் விளையாட்டுக் கழகம் 1:4 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்றன. (ச)

## விமானம் மூலம் துண்டுப் பிரசுரம்

(கொழும்பு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தங்கியிருக்கும் பொது மக்களை அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி நகருமாறு கோரப்படும் துண்டுப் பிரசுரங்கள் விமானம் மூலம் வீசப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மொழி மூலமான இந்த துண்டுப் பிரசுரங்களில் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் எவ்வாறு அரசாங்கத்திடம் சரணடைய முடியும் என்பது பற்றியும் விளக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

## மீனவர்களை கண்டுபிடிக்க இந்தியாவின் ஒத்துழைப்பு

திருகோணமலையிலிருந்து அண்மையில் மீன்பிடிக்க கடலுக்குச் சென்று காணாமல் போன மீனவர்கள் 6 பேரையும் தேடிக் கண்டுபிடிப்பதற்கு இந்தியா மற்றும் பங்களாதேஷ் கரையோரப் பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்பை பெற எண்ணியுள்ளதாக மீன்பிடி அமைச்சு தெரிவிக்கின்றது.

திருகோணமலையில் கடந்த 8 ஆம் திகதி வீசிய பலத்த காற்றுக்காரணமாக பல மீனவப் படகுகள் விபத்துக்குள்ளாகின. இவ்வாறு விபத்துக்குள்ளாகின மீன்பிடி படகிலிருந்து சிலாபம் தொடுவலை பகுதியைச் சேர்ந்த 6 மீனவர்கள் நேற்று முன்தினம் கரை திரும்பினர்.

தமது படகுகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாத அளவுக்கு பலத்த காற்று வீசியதோடு பாரிய அலைகள் தாக்கியதாகவும் கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்தனர். அனர்த்தத்தின்போது தனது படகின் சமிஞைகள் இயங்கவில்லை என குறிப்பிட்ட இந்த மீனவர்கள் கடும் போராட்டத்திற்கு மத்தியிலேயே தாங்கள் உயிர்தப்பியதாகவும் கூறினர்.

இதேவேளை இந்தக் காற்றினால் காணாமல் போன ஜோய் புத்தா என்ற படகிலிருந்த 6 மீனவர்கள் தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படகை தேடிக் கண்டுபிடிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டது. (ச-5)

## புகையிரத வண்டியிலிருந்து விழுந்து மாணவன் பலி

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு நோக்கி சென்ற புகையிரத வண்டியில் பயணம் செய்த பல்கலைக்கழக மாணவன் ஒருவர் புகையிரத வண்டியில் இருந்து சறுக்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.


திருகோணமலை சீனன்குடா பகுதியைச் சேர்ந்த முகமட் உவைஸ் முகமட் நியாஸ் (22 வயது) என்றழைக்கப்படும் மாணவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.


தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டப் படிப்பு மாணவனான இவர் திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பு ஊடாக ஒலுவில் பல்கலைக்கழகத்திற்கு சனி, ஞாயிறு தினங்களில் செல்வது வழக்கமாகும்.

இவ்வாறு இவ்வாரமும் இவர் இப்பல்கலைக்கழகத்திற்கு செல்லும் வேளையில் புகையிரத வண்டியில் இருந்து சறுக்கி விழுந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)







தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய ஆடிப்பூர விழாவில் அம்மனுக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெறுவதனையும் அம்மன் வசந்த மண்டபத்தில் வீற்றிருப்பதனையும் படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## மகிழ்ச்சியும் உல்லாசமும்!

"அவருக்கென்ன ஏழெட்டு கார் , நாலைந்து பங்களா இருக்கிறது. சந்தோஷமாக இருக்கிறார்!" என்று சில பேரைப் பார்த்து சொல்லத் தோன்றும்! ஆனால் நெருங்கி ஆராய்ந்து பார்த்தால் நம்மைவிட அவர்கள் தான் அதிகமாக அவஸ்தைப் பட்டுக்கொண்டிருப்பார்கள்.

சினிமா நட்சத்திரங்களையும்.. பிரமுகர்களையும் பார்க்கும் போது நாம் அப்படித்தான் நினைக்கிறோம். அவர்களின் இன்னொரு பக்கத்தைப் பார்த்தால்... மனத்தளர்ச்சி... போதைப்பழக்கம்–மதுப்பழக்கம்– இல் வாழ்க்கையில் சிக்கல்கள்–குடும்பத்தில் கோளாறுகள்–பிள்ளைகள் சரியில்லை–தனிமை–இப்படி அனேகம் இருக்கும்.

ஆடம்பரமாகவும் உல்லாசமாகவும் இருக்கும் ஒரு வரைப் பார்த்து அவர் நல்ல சந்தோஷமாக இருக்கிறதாக நாம் நினைக்கின்றோம். விஷயம் தெரிந்தவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

'FUN' என்பது வேறு Happiness என்பது வேறு! அதாவது ஆடம்பரம் உல்லாசம் என்பது வேறு! ஆனந்தம் என்பது வேறு! என்கிறார்கள். ஒன்று நடக்கும் பொழுது அனுபவிப்பது உல்லாசம். அது நடந்த பிறகு அனுபவிப்பது ஆனந்தம்!

ஆனந்தம்–என்பது ஆழமான உணர்வு! உள்ளார்ந்த உணர்வு! இப்பொழுது ரீ.வி.பார்க்கிறோம். சினிமா பார்க்கிறோம்... கிரிக்கெற் பார்க்கிறோம்... பார்க்கும்வரைக்கும் நல்லா பொழுது போவது மட்டுமில்லாமல் உல்லாசமாக இருக்கிறது.

சுற்றுலா போகிறோம்... சுற்றும் வரைக்கும் உல்லாசம்! நம் பிரச்சினைகளை தற்காலிகமாக மறந்து மனம் இலேசாகும் போது சிரிக்கிறோம்! இருந்தாலும், இதெல்லாம் உண்மையான மகிழ்ச்சியை ஏற்படுத்திவிடாது! ஏனெனில் இதன் பயன்கள் (Positive Effects) நாம் பார்த்துக்கொண்டி ருக்கும் வரைக்கும் தான் ! உல்லாசம் அதை விட்டு வெளியே வந்ததும் முடிந்துவிடுகிறது! அதுதான் 'FUN' என்பது!

ஆனால் Happiness என்பது அப்படியல்ல... ஒரு நிகழ்ச்சி முடிந்த பின்பும் நடிப்பதுதான் Happiness உண்மையான மகிழ்ச்சியை உல்லாசமான வழியில் அடைந்துவிட முடியாது! அதற்கு கொஞ்சம் சிரமப்பட வேண்டியிருக்கும்!

அதனாலேயே பலபோர் உண்மையான மகிழ்ச்சியை அடைவதற்கு முயற்சி பண்ணுவதில்லை... நழுவிப்போய் விடுகிறார்கள்! உல்லாசமாக இருக்கவேண்டும் என்பதற்காக சிலபேர் கல்யாணமே வேண்டாம் என்று இருக்கிறார்கள்.

தனியாக வாழ்க்கை நடத்துவது–குழந்தை வேண்டாம் என்று நினைக்கிறது–உல்லாசமாக இருக்கலாம். உற்சாகமாகக் கூடத் தோன்றலாம். ஆனால் ஒரு குழந்தையால் ஏற்படக்கூடிய மகிழ்வை அவர்கள் இழந்துவிடுகிறார்கள்!

"குழலினிது யாழினது என்ப தம்மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" –என்றார் வள்ளுவர் அதன் அர்த்தமும் ஆனந்தமும் அவர்களுக்குத் தெரியாமலே போய்விடும். உண்மையான மகிழ்ச்சி அடைவதற்கு என்ன வழி?

அடுத்தவர்களிடம் அன்பு செலுத்துங்கள் ஊருக்கும் உலகத்திற்கும் நல்லது செய்யுங்கள் உங்களால் முடிந்த சேவை செய்யுங்கள். இவைதான் அதற்கு வழி.

புதுக்கார்... புதுச்சட்டை போடுவதெல்லாம் FUN. அப்படி போட்டிருப்பவர்களையெல்லாம் ஆனந்தமானவர்கள் என்று நாம் நினைக்கிறோம். உல்லாசம்–உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டுவராதென்பதை புரிந்து கொண்டு நமது வாழ்க்கை முறையை மாற்றி ஒரு புது உலகத்தில் அடியெடுத்து வைப்போம்!

புதிதாக கல்யாணமான தம்பதி தேனிலவுக்குப் போய் விட்டு வந்தார்கள். "எங்கள் பிரயாணம் உல்லாசமாகவும், சந்தோஷமாகவும் இருந்தது" என்றது அந்தப் பெண்.

"எந்த ஊருக்குப் போனீர்கள்?" என்று கேட்டனர். அதற்கு அவள் "அவர் ஊட்டிக்குப் போனார். நான் கொடைக்கால் போய்விட்டு வந்தேன்." என்றாள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரசியல்வாதிகள், உட்பட 65பேரின் சொத்துகள் குறித்து லஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணை

(கொழும்பு)

அரசியல் வாதிகள், பொலிஸ் மற்றும் பாதுகாப்பு படை அதிகாரிகள், அரசாங்க உயரதிகாரிகள் 65 பேரின் சொத்துக்கள் தொடர்பாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு வினால் விசாரணைகள் நடத்தப்படுவதாக அத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் அரசியல்வாதிகள் 15பேர் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு படைகளைச் சேர்ந்த 20 பேர் அரசாங்க உயரதிகாரிகள் 30 பேர் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. உயர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவரும் இவர்களில் அடங்குகிறார்.

இப்பொலிஸ் அதிகாரிக்கு எதிராக பொலிஸ் அதிகாரிகள் சிலர் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே விசாரணை நடத்தப்படுவதாக தெரிய வருகிறது. அவருக்குச் சொந்தமான ஹோட்டல் மற்றும் பல பிரதேசங்களில் அவரால் நிர்மாணிக்கப்படுவதாக கூறப்படும் வீடுகள் முதலான சொத்துக்கள் தொடர்பாக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் புகாரிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள், அதிகாரிகளின் உடைமைகள் வங்கிக்கணக்குகள் உட்பட சகல சொத்துக்கள் தொடர்பாகவும் கிடைத்த முறைப்பாடுகளின்படி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், அமைச் சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள், மாகாண சபை அமைச்சர்கள் உட்பட பெருந்தொகையான அரசியல்வாதிகள் தொடர்பான பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் லஞ்ச ஊழல் ஆணைக் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரியவருகிறது.

கேள்விப்பத்திரங்கள் தொடர்பான முறைகேடுகள், ஊழல், சொத்துக்களை உரிய முறையில் பிரகடனப்படுத்தாமை போன்றவை மேற்படி அரசியல் வாதிகளுக்கு எதிரான பிரதான குற்றச்சாட்டுக்கள் ஆகும். (அ-6)

# வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் வெளியேறுவதற்கான பாதைகளைத் திறப்பது பற்றி இராணுவத்தினர் ஆராய்வு

வன்னியில் இடம்பெறும் மோதல்களால் இடம்பெயர்ந்திருக்கும் 2 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வெளியேறுவதற்கான பாதைகளைத் திறப்பது தொடர்பாக இராணுவத்தினர் அரசாங்க அதிபர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

வன்னி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, மோதல்கள் இடம்பெறும் பகுதிகளைச் சேர்ந்த அரசாங்க அதிபர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியிருந்ததாகவும். அந்தப் பேச்சுவார்த்தைக்கு அமைய மக்கள் வெளியேறுவதற்கான புதிய பாதைகளைத் திறப்பதற்கு இராணுவம் தீர்மானித்திருப்பதாகவும் மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரிய அறிவித்துள்ளார்.

எனினும், மக்கள் வெளியேறுவதற்கு எந்தப் பாதையைத் திறப்பது' என்பது பற்றி இதுவரை தீர்மானிக்கப்படவில்லையெனவும், மன்னார்–பூநகரி வீதியில் ஒரு பகுதியில் பாதையைத் திறப்பதற்கு இராணுவத்தினர் ஆலோசித்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இடம்பெயர்ந்திருக்கும் மக்கள் எதிர்நோக்கும் உணவு மற்றும் தங்குமிடப் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்க அதிபர்கள், இராணுவக் கட்டளைத் தளபதியிடம் சுட்டிக் காட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வரும் மக்களுக்கான தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நாங்கள் தயாராகவுள்ளோம். இதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியைப் பெற்றுக்கொள்வோம் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயகார தெரிவித்துள்ளார். (அ-6)

# இராசி பலன்

18.08.2008
(ஆடி 02, திங்கட்கிழமை)
சதயம் பிற்பகல் 4.08 மணிவரை
துதியை பின்னிரவு 2.53 மணிவரை
இராகுகாலம்–7.35–09.05 மணிவரை
சுபநேரம்–12.05–1.35 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | இஷ்டசித்தி, தொழில் இலாபம், குடும்ப மகிழ்ச்சி, பெருமையடைதல். |
| இடபம் | தொழில் நன்மை, நல்ல செய்தி, மேன்மை, முயற்சி கைகூடும். |
| மிதுனம் | உடல் உழைப்பு, புதிய திட்டமிடல், பெரியோர் உதவி, இடமாற்றம். |
| கடகம் | எதிர்பாராத அச்சம், காரிய தடங்கல், போசனசுகம், உடல் நலக்குறைவு |
| சிங்கம் | கௌரவமான நிலை, பணவருவாய், எடுத்த காரியம் கைகூடும், போசனசுகம். |
| கன்னி | திடீர்பயணம், முயற்சி கைகூடும், தேகநலன், நல்ல மரியாதை. |
| துலாம் | வியாபார நன்மை, முயற்சி தாமதம், புத்திரரால் கவலை, பணவிரயம். |
| விருச்சிகம் | பயந்த சுபாவம், புதியவிடயம், விரும்பாத உறவு, சுபநிகழ்வு. |
| தனுசு | இனிய அனுபவம், புதியபொருள் சேர்க்கை, நல்ல முயற்சி, வாக்குமேன்மை. |
| மகரம் | மாதர்நட்பு, காரியதாமதம், கடினவார்த்தை, பணவிரயம். |
| கும்பம் | பெரியோர் சந்திப்பு, ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், போசன நன்மை. |
| மீனம் | உறவினர் சந்திப்பு, மனக்குழப்பம், பிரயாணம், காரியதாமதம். |

வளவன்

# சிறைக் கைதிகளிடமிருந்து 500க்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு, களுத்துறை மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போது கைதிகளிடமிருந்து 500க்கும் மேற்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வஜிர விஜய குணவர்த்தன குறிப்பிட்டார். சிறைக்கைதிகள் கையடக்கத் தொலைபேசிகளின் உதவியுடன் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டுவந்தமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கையடக்கத் தொலைபேசிகளும் அடங்குவதாக கூறியுள்ள சிறைச் சாலை ஆணையாளர் இந்தக் கையடக்கத் தொலைபேசிகளை அடுத்த மாதம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு எண்ணியுள்ளதாகவும் குறிப்பிட்டார். (அ)

# அரசியல் எதிரிகளாகச் செயற்பட்டுவரும் ஐ.தே.க.வும் ஜே.வி.பியும் பேச்சுவார்த்தை

அரசியல் எதிரிகளாகச் செயற்பட்டு வரும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஜே.வி.பியினரும் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தை நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மற்றும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத்த அநுர குமார திஸநாயக்க ஆகியோருக்கு இடையில் இடம்பெற்றுள்ளது.

இதன் போது எதிர்வரும் சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைத் தேர்தல்களின் போது அதில் வெற்றிபெறுவது குறித்தும், தேர்தலின் பின்னர் அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படுவது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

அரசியலில் கூட்டு இல்லை எனக் கூறி வந்த இந்த இரண்டு கட்சிகளும் தற்போது பேச்சுநடத்தியுள்ளமையானது கொழும்பில் அரசியலில் மாற்றத்திற்கான அறிகுறி எனக் கருதப்படுகிறது. (அ-6)

# பல்லாயிரம் ஆண்டு பழமைவாய்ந்த மனித எச்சங்கள் அம்பலாங்கொடயில் மீட்பு

(கொழும்பு)

அம்பலாங்கொட ஹொட்ட பகுதியில் நடாத்தப்பட்ட தொல் பொருள் ஆய்வின் பொழுது பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த மனித எச்சங்கள் சுமார் 7ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக இருக்கலாம் என அனுமானிப்பதாக தொல்பொருள் திணைக்களம் தெரிவிக்கின்றது.

எவ்வாறாயினும் தொல் பொருள் ஆய்வு முடியும்வரை இதனை உறுதிப்படுத்த முடியாதென தொல்பொருள் திணைக்களம் சுட்டிக்காட்டியிருக்கிறது. அம்பலாங்கொட ஹொட்டவாய பகுதியில் இந்த மாத முற்பகுதியில் தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜேர்மனியின் உதவியில் தொல்பொருள் திணைக்களம் மேற்கொண்ட ஆய்விலேயே இந்த மனித எச்சம் மீட்கப்பட்டுள்ளது. (அ)

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

32ஆம் வினா தொடக்கம் 37 வினாக்கள் வரை ஒவ்வொன்றும் இருகூற்றுக்களைக் கொண்டுள்ளன.

1,2,3,4 என அடையாளப்படுத்துவதனூடாக கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளவற்றுள் மிகவும் பொருத்தமான கூற்றுக்களை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

அறிவுறுத்தல் அட்டவணை

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | உண்மை | பிழை |
| 2 | பிழை | பிழை |
| 3 | பிழை . | உண்மை |
| 4 | உண்மை | உண்மை |

| கூற்று -I | கூற்று -II |
|---|---|
| 32)1972ஆம் ஆண்டு யாப்பு அடிப் படை உரிமைகள் பற்றிய அத்தியாயத்தை அறிமுகப்படுத்தியது. | அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது உச்சநீதிமன்றத்தில் நியாயம் பெறும் வாய்ப்பு 1978 ஆம் ஆண்டு யாப்பில் உறுதிசெய்யப்பட்டுள்ளது. |
| 33)சட்டங்களை முன்கூட்டியே நீதிப் புனராய்வு செய்வதை 1ஆம், 2ஆம் குடியரசு யாப்புகள் அங்கீகரித்தன. | 1972 ஆம் ஆண்டு யாப்பால் அறிமுகம் செய்யப்பட்ட அரசியல் அமைப்பு நீதிமன்றம் இரண்டாம் குடியரசு யாப்பிலும் தொடர்ந்தது |
| 34)1978 ஆம் ஆண்டு யாப்பின் பிரகாரம் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் நியமனமே பாரிய சீர்திருத்தமாகும். | நிறைவேற்றுதிகாரம் கொண்ட ஜனாதிபதி 1978 ஆம் ஆண்டு யாப்பின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தால் பதவிநீக்கப்படலாம் |
| 35) 1931ஆம் ஆண்டு டொனமூர் யாப்பின் மூன்று செயலாளர்களும் பிரித்தானிய நலனிலேயே அக்கறை காட்டியமையால் எமது நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்பட்டது. | 1931ஆம் ஆண்டு டொனமூர் யாப்பு நடைமுறையில் இருந்தகால கட்டத்திற்தான் இலவசக்கல்வி போன்ற பாரிய திட்டங்கள் நடைமுறைக்கு வந்தது. |
| 36) 1947ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்ட 29ஆம் சரத்து 1972 ஆம் ஆண்டு யாப்பில் நீக்கப் பட்டதை சிறுபான்மையோர் வன்மையாகக் கண்டித்தனர். | 1947 ஆம்ண்டு யாப்பில் 29ஆம் சரத்து நடைமுறையில் இருந்தபோது எந்தச் சிறு பான்மையினர் உரிமையும் பாதுகாக்கப்படவில்லை. |
| 37) 1981 ஆம் ஆண்டு யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசாரத் தேர்தல் முறைமை சிறிய கட்சிகளுக்கு பாரிய அளவில் உதவியுள்ளது. | விகிதாசாரப் பிரதிநிதித்துவம் காரணமாக எந்தத் தொகுதியிலும் அறுதிப்பெரும் பான்மை பெறாத கட்சி உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட வாய்ப்புண்டு. |

## அரசியல் மூலத்துவங்கள் II (பகுதி-II
## Politicul Science -II (Part-II)

2மணித்தியாலயங்கள்
2 Hours

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக

(01) இலங்கைத் தேசிய காங்கிரசின் தோற்றமும். வளர்ச்சியும் அதன் வீழ்ச்சியும் விபரிக்குக?

(02) 1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பை மனத்திடை கொண்டு.
- i) நிர்வாகக் குழுமுறையின் தாக்கமும் சவால்களும் பற்றி விபரிக்குக?
- ii) சர்வசன வாக்குரிமை வழங்கல் எதிர்நோக்கிய வாதப் பிரதிவாதங்களை விபரிக்குக?
- iii) டொனமூர் யாப்பு இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சியில் "ஒரு மைல்கல்" என்று குறிப்பிடப்படுகிறது. விளக்குக.

03) 1947ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பு
- i) பிரித்தானிய மாதிரிப்பாராளுமன்ற முறைமையை அறிமுகப்படுத்தியது ஆராய்க?
- ii) பன்முகப்படுத்திய சிறுபான்மையோர் காப்பீடுகள் யாவும் காப்பீகளாக அமையாது காலாவதியாகிய போயினடு என்ற கண்டனத்தின் உண்மைத் தன்மை என்ன? விளக்குக?
- iii)தேர்தல் தொகுதிகளின் வரையறை, தேர்தல் தொகுதிகள்த மொத்தப் பாராளுன்ற உறுப்பினர் தெரிவு என்பவை பற்றிய எத்தகைய குறிப்புக்களைத் தந்தது விபரிக்குக?

04) 1ஆம் குடியரசு யாப்பை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் தலைப்புக்களினை விபரிக்குக.
- i) சோசலிச அரசியல் பேரவையின் மீயுயர் அதிகாரம்
- ii) நீதிமன்ற அமைப்பும் குறிப்பாக அரசியல் அமைப்பு நீதிமன்றமும்
- iii) 1972ஆம் ஆண்டு யாப்புக்கான தோல்விகளை அடையாளப்படுத்தி விபரிக்குக?

05) 2ஆம் குடியரசு யாப்பை மனத்திடை கொண்டு
- i) மக்கள் தீர்ப்பு என்ற நேரடி சனநாயக முறைமை பற்றி விபரிக்குக?
- ii) விகிதாசாரத் தேர்தல் முறைமை பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது? ஆராய்க?
- iii) தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் தெரிவும் பணியும் விபரிக்குக?

06) 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் சனாதிபதிக்கான தேர்தல்/கடமைகள் பதவி விலகல் என்பன பற்றி விபரணக்கட்டுரை எழுதுக?

07) பின்வருவனவற்றுள் மூன்றுக்கு சிறுகுறிப்பு எழுதுக.
- i) இலங்கைத் தமிழர் அரசியல் கட்சிகளும் வகிபாகமும்
- ii) இடதுசாரிகள் படிப்படியாக வலது சாரிகளாக மாறியமை தான் அவர்களின் தோல்விக்குக் காரணம் விபரிக்குக?
- iii) ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும், அதன் அண்மைக்கால நடவடிக்கைகளும் சமாதானத்தை நோக்கியதாக அமைந்துள்ளனவா? பரிசீலிக்குக?
- iv) 1972ஆம் யாப்பு அடிப்படை உரிமைகள்
- v) 'சார்க் அமைப்பு இந்தியா லெவியதானாக மாறப்பார்க்கிறதா' அண்மைக்கால வெற்றி தோல்விகளை நுணுகி ஆராய்க.

## AB⁻ நெகற்றிவ் இரத்தம் வழங்கக் கோரிக்கை

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு AB⁻ நெகற்றிவ் வகை இரத்தம் அவசரமாகத் தேவைப்படுவதால் கொடையாளிகள் வைத்தியசாலைக்கு சமுகமளித்து இரத்த தானம் வழங்கி உதவுமாறு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கி வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.(அ)

## தெய்வீக இசையரங்கு

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடாத்தி வரும் தெய்வீக இசையரங்கில் இன்று திங்கட்கிழமை மாலை 5.30 முதல் 6.30 மணிவரை திருமதி நாகம்மா மகாலிங்கம், செல்வி திவ்யமணி மகாலிங்கம் ஆகியோரின் இசைக் கச்சேரி இடம்பெறும்.

அணி செய் கலைஞர்களாக ஏ.ஜெயராமன் வயலின், எஸ்.மகேந்திரன் மிருதங்கம், செல்வன் எஸ்.விமல்சங்கர் முகர்சிங் ஆகியோர் பங்கு பற்றுவார்கள். (அ)




## 'சிப்தொற' புலமைப்பரிசில் கொடுப்பனவுக்கு காரைநகரில் இருபது மாணவர் தெரிவு

காரைநகர் பிரதேசத்தில் சமுர்த்தி பயனாளிகள் குடும்பங்களில் க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் இருபது வறிய மாணவர்களிற்கு சமுர்த்தி அதிகார சபையின் 'சிப்தொற' புலமைப்பரிசில் பண உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு புலமைப் பரிசிலுக்குரிய மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் எதிர்வரும் 2010 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் காரைநகர் உதவி அரச அதிபர் இ.த ஜெயசீலனின் தலைமையிலான குழுவினரால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்டு அவர்களின் விபரங்கள் சமுர்த்தி அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விபரம் வருமாறு,

காரைநகர் மேற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த செல்வன் ஞா. பிருந்தாபன், செல்வன்இ.கிரிவாசன், செல்வன் ஜெ. கங்காதரன், காரை வட மேற்கு கிராம சேவையாள் பிரிவைச் சேர்ந்த செல்வி கு.மயில்வாகனம், காரை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த செல்வி சி. சிவானந்தராசா ,செல்வி கி. நவரத்தினம், செல்வி நே.சோமசுந்தரம், காரை தெற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த செல்விக.நல்லதம்பி, காரைவடக்கு கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த செல்வி த. நடராஜா, செல்விசி.குமாரசாமி, காரைநகர் வட கிழக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த செல்வி பி. பஞ்சராசா, செல்வன் வி. மயூரன், செல்வி இ. இராசரத்தினம், செல்வி க. யோகநாதன், செல்வி வி.கதிர்காமத்தம்பி, காரை மத்தி கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த செல்வன் சோ. கஜந்தன், செல்வி கோ. கந்தசாமி, செல்வி நி. குகராஜசிங்கம், செல்வி ஜெ. இராசையா, செல்வன் நி. கஜேந்திரன் ஆகியோரேயாவர். இதேபோல் கடந்த 2008,2009ஆண்டுக் குரிய க.பொ.த உயர்தரவகுப்பில் கல்வி கற்கும் இருபது இருபதாக நாற்பது மாணவர்களிற்கு சமுர்த்தி அதிகார சபையின் சிப்தொற கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (அ-246)

## நல்லூர் உற்சவகால ஆன்மீக நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுகளில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு ''வேல் உண்டு வினைதீர்க்க'' என்னும் பொருளில் சைவப்புலவர் பால சண்முகனின் சொற்பொழிவும்,

இணுவில் இளந் தொண்டர்சபை அறநெறிப் பாடசாலை மற்றும் பெரிய விளான் வட சேரிப் பிள்ளை யார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும். (அ)



வடலியடைப்பு கலைவாணி முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் ந.நடராஜா ஒலிம்பிக் தீபம் ஏற்றி விளையாட்டினை ஆரம்பித்து வைப்பதனையும், அருகில் நிகழ்வின் தலைவர் சி.நல்லையா, ஆசிரியர் க.தர்மராசா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## காரைநகர் சமுர்த்தி பயனாளிகளுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கல்

(காரைநகர்)

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகளிற்கு D.R.C. நிறுவனம்.(DANISH REFUGEE COUNCIL SRILANKA) நிவாரணப் பொருட்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகரில் சமுர்த்தி நிவாரணம் பெறும் 1877 குடும்பங்களிற்கே இவ் நிவாரணப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

இம் மாதம் 20ஆம் திகதி புதன்கிழமை காரைநகர் மேற்கு (J/40) கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 251 குடும்பங்களிளிற்கு சின்னாலடியில் அமைந்துள்ள காரை மேற்கு கிராம சேவையாளர் அலுவலகத்திலும், காரை வடக்கு(J/46)கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 121 குடும்பங்களிற்கு சிவகாமி அம்மன் கோவிலடியிலும், 21ஆம் திகதி வியாழக்கிழமை காரை வட மேற்கு(J/41) கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 92 குடும்கங்களிற்கு கோவளம் கிராம அபிவி ருத்திச் சங்கக் கட்டடத்திலும், 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமைகாரை தெற்கு (J/44) கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 236குடும்பங்களிற்கு (J/43) கிராமசேவையாளர் அலுவலகத்திலும், 25ஆம் திகதி திங்கட்கிழமை காரை தென் மேற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 234 குடும்பங்களிற்கு வியாவில் சனசமூக நிலையத்திலும், 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காரை மத்தி(J/48) கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 242 குடும்பங்களிற்கு பொன்னம்பலம் வீதியிலமைந்துள்ள காரை மத்தி சமூர்த்தி உத்தியோகத்தர் அலுவலகத்திலும், 27ஆம் திகதி புதன்கிழமை காரை கிழக்கு(J/42)கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 268 குடும்பங்களிற்கு (J/43) கிராம சேவையாளர் அலுவலகத்திலும், 28ஆம் திகதி வியாழக்கிழமை காரை வட கிழக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 337குடும்பங்களிற்கு சிவகௌரி கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்திலும், காரை தெற்கு (J/43)கிராம சேவையாள் பிரிவைச் சேர்ந்த 96 குடும்பங்களிற்கு(J/43) கிராம சேவையாளர் அலுவலகத்திலும் குறித்த அமைப்பினால் வழங்கப்படுகின்றது.

சமூர்த்தி பயன் பெறும் குடும்பங்கள் நிவாரணம் பெற வரும் போது அங்கத்தவர் எண்ணிக்கைக்கேற்ப 1-3 லீற்றர் மரக்கறி எண்ணெய் வழங்கப்படவுள்ளதால் கொல்கலன் மற்றும் உரிய ஆவணங்களுடன் குறித்த திகதிகளில் தவாறாது வருகை தந்து பொருட்களை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ-246)

# நோத்முதல் கோபல்லவா வரை (71)



### இடைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

அவர் 1890 ஆம் ஆண்டின் மே மாதத்தில் இலங்கைக்கு ஆள்பதியாக வந்தார். அவர்வந்த காலத்தில் இலங்கையில் பொருளாதார வளம் செழிப்பாகவே இருந்தது. கோப்பிச் செய்கை கைவிடப்பட்டதும் தேயிலை, தென்னை, கறுவா, கொக்கோ ஆகிய பயிர்கள் பயனளித்தன. காரீயச் சுரங்கங்கள் தோண்டப்பட்டு அது நிலையான ஏற்றுமதிப் பொருளாயிற்று. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தேயிலை 10 525380 இறாத்தல் ஏற்றுமதி செய்யப்பட்டது.



ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர்



ஹிக்கடுவை ஸ்ரீசுமங்களதேரர்

ஆதர் ஹவலொக் அவர்கள் காலத்தில் பல நன்மையான அலுவல்கள் நடைபெற்றன. முன்னர் மக்களின் வெறுப்புக்குக் காரணமாயிருந்த தானியவரி நீக்கப்பட்டது. அதனால் அவருக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டது. ஆனால் அதன் நீக்கத்துக்காக யோச்வால் அவர்களும் கிஸ்தபர் எலியட் அவர்களும் கடுமையாக வேலை செய்தார்கள். ஐரோப்பியர் பிரதிநிதியாயிருந்த சி.என். கிறிஸ்ரி அவர்கள் தானிய வரியின் நீக்கத்துக்காக ஒரு பிரேரணை பிரேரித்தும் பேசியுள்ளார் என்பதை நாம் மறந்து விடலாகாது.

தான்ியவரி தமிழ்நாட்டுக்குப் புதியதல்ல. தமிழ் மன்னர் காலத்தில் ஆறில் ஒன்று அரசனுக்குக் கொடுத்தே வந்தார்கள். ஆனால் ஆங்கிலேயர் பத்தில் ஒன்றே தமது ஆட்சியில் விதித்தார்கள். அது விதித்தபடியிருந்த போதே குத்தகைக்காரர் போட்டியிட்டு அதனை அதிகரித்தார்கள். அதனால் அது பத்துக்கொன்று, கந்துக்கொன்று, களத்துக்கொன்று, சும்மா ஒன்று, சுமை கூலி ஒன்று என அதிகரித்தமையால் மக்கள் வெறுப்புக்கு இலக்காயிற்று.

## மீள் பார்வை


ஆள்பதி ஹவலொக் அவர்கள் காலத்தில் வீதிகள், புகைவண்டிப் பாதைகள் தொடர்ந்து அமைக்கப்பட்டன. அவர் காலத்திலே தான் கொழும்பிலுள்ள தொழிற்றுறைக் கல்லூரியும் பெரிய தபாற் கந்தோரும், கழனி நதிக்கு மேலாக விக்டோரியாப் பாலமும் அமைக்கப்பட்டன.

ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றிய காலந்தொடக்கம் கிறிஸ் தவ மிசனரி மார்களே கல்வி சம்பந்தமாக அதிக சேவை செய்து வந்தார்கள்.

அரசாங்கம் சொந்தப் பொறுப்பில் பாடசாலைகளை அமைத் துச் சேவை செய்யத் தொடங்கிய பின்னரும் மிசனரி மாரின் பாடசாலை களே அதிகமாக இருந்தன. உதாரண மாக 1868 ஆம் ஆண்டின் புள்ளி விபரத் தைக் குறிக்கின், அது பின்வருமாறு அரசாங்க பாடசாலைகள்:-

| *பாடசாலையின்தரம்* | *தொகை* | *மாணவர்* |
|---|---|---|
| ஆங்கிலப்பாடசாலை | 18 | 2000 |
| துவிபாஷா பாடசாலை | 41 | 1950 |
| சுதேச மொழிப் பாடசாலை | 65 | 3624 |

கல்வி நிலையை ஆராய்வதற்கும் ஆலோசனைகள் தகவுரைகள் கூறுவதற்கும் 1865 ஆம் ஆண்டில் ஒரு நிர்வாகசபை நியமிக்கப்பட்டது. அதன் தலைவராக றிச்சாட் மோகன் அவர்கள் அமர்ந்து திருத்தங்கள் பல உண்டாவதற்கு வழிசெய்தார். முன்னர் நியமிக்கப்பட்ட கல்வி விசாரணைச் சபை குலைக்கப்பட்டுக் கல்வித் திணைக்களம் திறக்கப்படலாயிற்று. அதில் ஆள்பதியின் கட்டுப்பாட்டில் ஒரு கல்வி அதிபர் நியமிக்கப்பட்டார். அதனால் மிகக் குறுகிய காலத்திலேயே 200 அரசாங்கப் பாடசாலைகளில் 11000 மாணவர் பயில வசதிகள் செய்யப்பட்டன. சமயக் கல்வியில் அதுகாறும் இருந்த தடைகள் நீக்கப்பட்டதும் 1872 ஆம் ஆண்டளவில் மிசனரிமார் பொறுப்பில் 40 பாட சாலைகள் நடாத்தப்படலாயின. அவற்றில் 25000 மாணவர் கல்வி பயின்றனர். அரசினர் பாடசாலைகள் பெரும்பாலும் மலை நாடுகளிலும், மிசனரிமாரின் பாடசாலைகள் பெரும்பாலானவை கரைநாடுகளிலும் இருந்தன. ஆகவேதான் மிசனரிமாரின் பாடசாலைகள்பலவாக இருந்தன. இத் தொகையதிகரிப்பு 1890 ஆம் ஆண்டிலும் நிலவியது. அக் காலத்தில் அரசாங்கப் பாடசாலைகளின் தொகை 436 ஆக இருந்த போது மிசனரிமாரிடம் 985 பாடசாலைகளிருந்தன. அக் காலத்தில் 114000 பிள்ளைகள் பாடசாலையில் படித்தார்கள்.



**கொழும்பு வெஸ்லி வித்தியாலயம்** :-தேவாலயங்களின் ஆதிக்கத்திற்குள்ளே ஆரம்பகால பாடசாலைக் கல்வி கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. பாடசாலைக் கல்வியில் ஏற்பட்ட பரம்பல் கல்வி கற்பதனை அதிகரிக்கச் செய்ததன் மூலம் தேவாலயக் கல்விக்கெதிர்ாக போராடும் குழுக்கள் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தது. இந்து. பௌத்த மற்றும் இஸ்லாமியப் பாடசாலை முறைமையொன்று உருவாக்கம் பெற்றது. (ARNOLD WRIGHT 1900)

அக்காலத்திலே இங்கிலாந்துக்குச் சென்று படிப்பதற்கும் வசதிகள் ஏற்பட்டன. கேம்பிரிச் சர்வகலாசாலைப் பரீட்சைகள் இலங்கையிலும் நடத்தப்பட்டு அவற்றில் திறமையுடன் சித்தி பெற்றவருக்கு இங்கிலாந்தில் படித்துவர உபகாரநிதி அளிக்கப்பட்டது. இந்தியாவிலும் சென்னை, கல்கத்தா ஆகிய இடங்களில் சர்வகலாசாலை வசதிகள் ஏற்பட்டதால் இலங்கையர், சிறப்பாகத் தமிழர் அங்கே சென்று படித்து பாண்டித்தியமடைவாராயினர்.

முன்னர் 1857 ஆம் ஆண்டில் சென்னைச் சர்வகலாசாலையில் சிறுப்பிட்டி வைரவநாதர் தாமோதரம்பிள்ளையும், சுது மலை கறல் விசுவநாதபிள்ளையும் பெருஞ் சிறப்புடன் B.A. பரீட்சையில் சித்தியடைந்த காலத்தில் பரீட்சகராயிருந்த G.U. போப் என்ற கலாவிற்பன்னர் இவர்களுடைய விடைப் பத்திரங்களில் "இவர்கள் எங்கள் பரீட்சை யின் அளவிற் பார்க்கக் கூடிய திறமையுள்ள வர்கள்" என எழுதியமை யாழ்ப் பாணத்தா ருக்கும் வட்டுக்கோட்டைக் கல்லூரிக்கும் புகழைக் கொடுத்தது.

**க.சி.குலரத்தினம்**

தமிழ்க் கல்விக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் சலியாதுழைத்த ஆறுமுகநாவலர் அவர்கள் தமது 26 ஆம் வயதில் அச்சுக் கூடம் வாங்குவதற்குச் சென்னை பட்டினஞ் சென்றார் என்றால் அவர் முயற்சியை என்னென்பது. (தொடரும்)

# யாழ்.குடாநாட்டில் ஆங்கிலமொழிக் கற்றல், கற்பித்தல் (1)

# பிரயோக மொழியியலினூடாக ஓர் நோக்கு

### அறிமுகம் (Introduction)

இக்கட்டுரையானது யாழ். குடாநாட்டின் ஆங்கிலமொழிக் கல்வியின் நிலையையும் அது தொடர்பான ஆங்கில மொழிக் கற்பித்தல் சம்பந்தமான பரிமாணங்களையும் தொட்டுச் செல்லமுயல்கின்றது.

ஆங்கிலமொழிக் கல்வி என்பது காலத்தின் தேவையாகவும், உலகமயமாக்கலின் ஓர் உந்துசக்தியாகவும், உயர்கல்வியை எய்தும் கல்விச் சமூகத்தின் கூரிய கருவியாகவும் தற்காலத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்கிளிலோ அல்லது உயர்கல்வி பெறும் நிறுவனங்களிலோ ஆங்கிலமொழிக் கல்விக்கும், ஆங்கில மொழி கற்றலிற்கும் பல்வேறு பரிமாணங்களில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, ஓர் மாணவன் கல்வி எனும் சூழலிற்கு உள்வாங்கப்படும் நிலையிலிருந்தே பல்வேறு வகைப்பட்ட அல்லது பல்வேறு மட்டங்களிலான ஆங்கிலமொழிப் போதனைகளிற்கு தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்கின்றான். மிகச் சுருக்கமாகக் கூறுமிடத்து, ஓர் மாணவனது முழுக்கல்வி அனுபவமானது ஆங்கிலமொழிக் கற்றலுக்கான சந்தர்ப்பத்தையும் தன்னுள் கொண்டுள்ளது.

தொடர்ந்து 13 வருட பாடசாலைக் கல்வியிலும், அங்கு தரப்படுகின்ற ஆங்கிலம் கற்றலிற்கான சந்தர்ப்பங்களை உள்வாங்கிய நிலையிலும் மாணவர்கள் உயர் கல்வியை நாடும் நிலையில், மீண்டும் ஆங்கில மொழிக் கல்வியும், அதனைக் கற்றலிற்கான சந்தர்ப்பங்களும் மேலும் மேலும் அதிகரிக்கப்படுகின்றன.

எனினும் மாணவர்கள் ஆங்கிலமொழிற் கற்றலில் குறிப்பிட்ட ஓர் அடைவுத்திறனை எட்டுவதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். இந்நிலையை மாற்றுவதற்கு பல்வேறு மட்டங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், துரிதகரமான முன்னேற்றத்தை எட்டுவதற்கான அறிகுறிகள் தென்படுவது சாத்தியமற்றதாகத் தெரிகின்றது. இக் கட்டுரையானது இப் பிரச்சினையை மையமாக வைத்து நவீன ஆங்கிலமொழிக் கற்றல் தொடர்பான ஆய்வுகளை சான்றாகக் கொண்டும், தற்பொழுது பல்வேறு மட்டங்களில் நடைபெறும் ஆங்கிலமொழிக் கற்பித்தற் செயற்பாடுகளை விபரித்தும் ஓர் பொதுமையான கருதுகோள்களை முன்வைக்க முயல்கின்றது.

**யாழ்ப்பாணத்தில் ஆங்கில மொழி கற்பிக்கும் செயற்பாடுகளும் அதனை மேற்கொள்ளும் கட்டுமானங்களும்**

"ஆங்கிலமொழிக் கல்வி" (English Language Education) என்பது ஓர் பரந்த குடை போன்ற அம்சத்தைக் கொண்டதாகவுள்ளது. இப்பரந்த சொற்பதத்தின் கீழ் பல்வேறுபட்ட ஆங்கிலமொழிக் கற்றலிற்கான சந்தர்ப்பங்களும், தன்மைகளும் உள்ளடக்கப்படு கின்றன.

- ஆங்கிலமொழியூடான கல்வி (English Medium Education)
- ஆங்கிலமொழிக் கற்றல்(English Language Learning)
- ஆங்கிலமொழியைக் கற்பித்தல் (English Lang Teaching)
- கற்பித்தலிற்கான சாதனங்கள் (Desigining textbooks)
- கற்பிக்கும் ஆசிரியர்களிற்கு பயிற்சிகள் வழங்கல்(Teacher Education & Training)
- மீள் பயிற்சி வழங்கல்(Re-training Programmes)
- கற்பித்தல் முறையியல்(Teaching Methodology)

யாழ்.குடாநாட்டை நோக்குமிடத்து மேற்குறிப்பிட்ட ஏழு விடயங்களும் ஏதோ ஒரு பரிமாணத்தில் இயங்குகின்றன அல்லது இயக்கப்படுகின்றன.

இக் கட்டுரையானது முதலாவது விடயத்தைத் தவிர்த்து மற்றைய விடயங்களை உள்ளடக்கிச் செல்கின்றது. ஏனெனில் இவ் விடயங்களினூடு எய்தப்படும் அனுதாபங்கள் நிச்சயமாக, ஆங்கில மொழியைக் கற்பிக்கும், கற்கும் திறன்களை வளப்படுத்துவதற்கும் மேலும் துரிதமாக இத் திறன்களை கையாள்வதற்கும் சந்தர்ப்பங்களை வழங்கலாம். ஆங்கிலமொழியினூடான கல்வி என்பது வேறு ஓர் சந்தர்ப்பத்தில் அலசப்பட வேண்டியதொன்றாகும்.

ஆங்கிலமொழியைக் கற்பிக்கும் செயற்பாடுகளில் கீழ்க்குறிப்பிடப்படுகின்ற நிறுவனங்கள் முக்கிய பங்குவகிக்கினறன.

- பாடசாலைகள்
- ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள்
- கல்வியியற் கல்லூரிகள்
- உயர்கல்வி,தொழில்நுட்ப நிறுவனங்கள்
- பல்கலைக்கழகங்கள்

இவ் ஐந்து நிறுவனங்களும் ஆங்கில மொழிப் போதனையிலும் கற்றலிலும் போதுமான அளவு செல்வாக்குச் செலுத்துகின்றன.

இந்நிறுவனங்கள், ஆங்கிலமொழிக் கற்பித்தலை சிறந்த முறையில் சமூகங்களுக்கிடையில் இணைத்துச் செயற்படுத்துவதில் தெளிவாக இருப்பதுடன், பல்வேறுபட்ட நிதி நிறுவனங்களின் (சர்வதேச மட்டம் உட்பட) உதவியுடன் தேவையான கற்பித்தலிற்கான சாதனைங்களை வருவிப்பதுடன் தம் நிறுவனக் கட்டுமானங்களையும் வசதிகளையும் இச் செயற்பாட்டை ஊக்குவிப்பதற்காக வளம்படுத்திக் கொண்டுள்ளன. அல்லது வளப்படுத்துவதாகக் காட்டிக்கொள்கின்றன.

இந் நிறுவனங்கள் இதுவரை பௌதீகக் காரணிகளை இனங்கண்டு, அக்குறைகளை நிவர்த்தி செய்வதில் மிக அக்கறையாக இருந்துள்ளன.

எல்லாவற்றிற்கும் மேலாக இரு முக்கியமான அம்சங்கள் இனங்காணப்பட வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம்.

- ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களின் தோற்றமும் வாண்மை விருத்தியும்.
- அவ் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான கட்டுமானங்களும், அவற்றை விருத்தி செய்வதற்கான அவசியத் தன்மையும்.

தற்பொழுது நிலவுகின்ற இரண்டாம் மொழிக் கற்றல் கோட்பாடுகளை மையப்படுத்தி அவதானிக்கும் பொழுது ஓர் மாணவன் தனது இரண்டாம் நிலைக்கல்வியை (க.பொ.உயர்தரம்) பாடசாலையில் நிறைவு செய்யும் பொழுது அவன் பெற்ற கல்வி அறிவிற்குச் சமாந்தரமாக ஆங்கில மொழியைக் கையாளும் தேர்ச்சியும் திறனும் அவனால் உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும். (தொடரும்)

**வ.பரந்தாமன்**
விரிவுரையாளர்,
ஆங்கிலமொழிப் போதனை நிலையம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# றோயல் கல்லூரி, கொழும்பு -07

## முன்னோடிப்பரீட்சை

ஆனி 2008
June 2008

தரம்-13 Pilot Examination

அரசியல் மூலத்துவங்கள் II (பகுதி-I)
Politicul Science -II (Part-I)

1மணித்தியாலயம்
1 Hour

எல்லா வினாக்களுக்கும் விடைதருக

(01) 1833ஆம் ஆண்டு கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்தின்படி சட்டசபைக்குத் தலைமை தாங்கியவர்,
1. தேசாதிபதி 2) சபாநாயகர்
3) இராணுவத் தளபதி 4) ஐரோப்பியச் செயலாளர்

(2) உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்களுக்கு, கோல்புறூக் சீர் திருத்தத்தின் படி ஆரம்பத்தில் மசோதாக்களை கொண்டுவரும் உரிமை மறுக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கு மசோதாக்கள் கொண்டுவரும் உரிமை எப்போது வழங்கப்பட்டது.
1) 1882 2) 1859 3) 1891 4) 1901

(3) கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்தின் முக்கிய விளைவு.
1) நெற்செய்கைக்கு முக்கியம் தரப்பட்டமை
2) பிரித்தானியாவின் மேலாதிக்கத்திற்கு சாவுமணி அடிக்கப்பட்டது
3) இலங்கையில் ஓர் இரட்டைப் பொருளாதார அமைப்பு உருவாக்கப்பட்டமை
4) குறைந்த பொருந்தோட்டத்துறை பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டது

(4) இலங்கையின் அரசியல் சீர் திருத்தங்களை பின்வரும் வகையில் அடையாளப்படுத்தலாம்.
1) கோல்புறூக், மனிங், குரு மைக்கலம்த மனிடெவான்ஷயர் டொனமூர்
2) கோல்புறூக், மனிங்டெவன்ஷயர் , மனிங் கருமைக்கலம், டொனமூர்
3) கோல்புறூக், குருமக்கலம், மனிங்டெவான்ஷயர், மனிங், டொனமூர்
4) கோல்புறூக், குருமக்கலம், மனிங், டெவான்ஷயர்,டொனமூர்

5) 1924ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்தத்தின் பிரகாரம் சட்டசபை அங்கத்தவர்கள் முறையே,
1) 37 உறுப்பினர். 14பேர் உத்தியோகப் பற்றுள்ளோர், 23பேர் உத்தியோகப் பற்றற் றோர்
2) 21உறுப்பினர். 11பேர் உத்தியோகப் பற்றுள்ளோர், 10பேர் உத்தியோகப் பற்றற்றோர்.
3) 49 உறுப்பினர். 12 பேர் உத்தியோக பற்றுள்ளோர், 37பேர் உத்தியோகப் பற்றற்றோர்
4) 61 உறுப்பினர். 03 பேர் உத்தியோக பற்றுள்ளோர், 58பேர் உத்தியோகப் பற்றற்றோர்

6) குரு மக்கலம் அரசியல் சீர் திருத்தத்தின் பிரகாரம் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் நால்வரின் படித்த இலங்கையர் சார்பில் தெரிவுசெய்யப்பட்டவர்,
1) E.W. பெரேரா 2) சேர்.பொன்.இராமநாதன்
3) சித்திலெப்பை 4) C.W.W. கன்னங்கரா

7) இலங்கைக்கு தேசிய காங்கிரசின் தொடக்கமும் அதன் முதல் தலைவரும்,
1) 1916 சேர் பொன்.அருணாச்சலம் 2) 1924 சேர் பொன்.இராமநாதன்
3) 1919 சேர் பொன்.அருணாச்சலம் 4) 1917 சேர் முத்துக்குமார சுவாமி

8) மனிங் சீர் திருத்தத்தின் பிரதான குறைபாடு,
1) தேசாதிபதியின் அதிகாரம் குறைய சுதேசிகள் அரசியலில் ஈடுபடும் வாய்ப்புக்கூடியது.
2) சங்கங்களின் உறுப்புரிமை அங்கீகாரம் அவை சார்ந்த துறைகள் வளர்ச்சியடைய உதவியது.
3) உத்தியோகப் பற்றற்றோரின் எண்ணிக்கை அதிகரிக்க அரசியல் நாகரீக மற்றவர்கள் அதிகம் செல்லவாக்கு பெற்றமை.
4) பொறுப்புக்களும் அதிகாரமும் வெவ்வேறு இடங்களில் பிரிபட்டிருந்தமை.

9) 1924ஆம் ஆண்டு இனவாரித் தேர்தல்மூலம் 06பேர் தெரிவுசெய்யப்பட்டனர் அதில் மேல் மாகாணத் தமிழ் பிரதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்,
1) சேர்.பொன். அருணாச்சலம் 2) சீமாட்டி செல்லமுத்து
3) அருணாச்சலம் மகாதேவா 4) உருத்திரா

10) 1924ஆம் ஆண்டு சீர் திருத்தத்தின் பிரகாரம் தேசாதிபதி
1) உத்தியோகப் பற்றற்றவர்களின் முழுச் சம்மதத்துடன் மசோதாக்களை நிறைவேற்றினால் போதும்
2) உத்தியோகப் பற்றுள்ளோரதும் நியமன அங்கத்தவர்களினதும் சம்மதத்துடன் நிறைவேற்றினால் போதும்.
3) தன் சொந்த எண்ணத்தில் யாரும் சம்மதமும் இன்றே குடியற்ற நாட்டு காரிய தரிசிக்கு எழுதினால் போதும்.
4) பிரித்தானிய மகாராணியின் சம்மதத்துடன் தானே தீர்மானித்தால் போதும்.

11) டொனமூர் யாப்பின் பிரகாரம் இலங்கை அமைச்சர்கள்,
1) அரசியல் அமைப்பு காவல் நாய்களாகச் செயற்பட்டனர்
2) நிர்வாகக் குழுக்களால் நியமிக்கப்பட்டனர்.
3) கூட்டுப் பொறுப்புத் தத்துவத்தை பின்பற்றினர்
4) நிதி மசோதக்களை மகாதேசாதிபதியுடன் கலந்தாலோசித்தனர்

12) டொனமூர் யாப்பின் காவல் நாய்கள் எனப்படுவது,
1) அமைச்சர்களை 2) மூன்று செயலாளர்களை
3) தேசாதிபதியை 4) குடியேற்ற நாட்டுக்காரிய தரிசியை

13) இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்படுதல், தாய்மொழி போதனா மொழியாக்கப்படல், இலவச மருத்துவ சேவை, உணவு மானியம் வழங்கப்படல் போன்ற மக்கள் நலம் பேணும் திட்டங்கள் எமது நாட்டில் செல்வாக்குப் பெறக் காரணம்.
1) படித்த இலங்கையரின் செல்வாக்கு
2) பிரதேச வாரிப்பிரதிநிதித்துவத்தின் செல்வாக்கு
3) சர்வசன வாக்குரிமையின் செல்வாக்கு
4) தொழிலாளர் இயக்கங்களின் செல்வாக்கு

14) டொனமூர் அரசியல் திட்டத்தின் பிரதான குறைபாடாக குறிப்பிடப்படுவது
1) இலங்கையர்களுக்கு குறிப்பிட்ட அளவு பொறுப்பாட்சி வழங்கப்பட்டது
2) மக்கள் பிரதிநிதிகள் சட்ட நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருத்தல்.
3) தாராண்மை ஜனநாயக அரசியலின் பெரும்பகுதி நிறைவேற்றப்பட்டது.
4) மூன்று காரிய தரிகளிடம் காணப்பட்ட அதிகாரங்கள்

15) சோல்பரி யாப்பின் கீழ் மகாதேசாதிபதி பற்றிய சேர்மானம்,
A. மேற்சபைக் கூட்டங்களுக்கு தலைமை தாங்குவார்
B. பிரித்தானிய குடியினால் நியமிக்கப்பட்டார்
C. இனக்கலவரங்களை அடக்கப்பெறுப்பானவர்
D. மந்திரி சபை உறுப்பினர்களை நியமித்தார்
1) AC 2) BC 3) CD 4) AD

16) சோல்பரி யாப்பில் இலங்கையில் எத்தனை தொகுதிகள் பல் அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டன.
1) 7 2) 8 3) 6 4) 5

17) சோல்பரி யாப்பின் நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவர்
1) தேசாதிபதி 2) சபாநாயகர் 3) பிரதம நீதியரசர் 4) நீதியமைச்சர்

18 சோல்பரி யாப்பின் கீழ் காணப்பட்ட பிரதம மந்திரியானவர்,
A. பொதுச்சேவை ஆணைக்குழுவினால் பதவி நீக்கம் செய்யப்படக்குடியவராக இருந்தார்.
B. பாராளுமன்றத்தைக் கலைத்தல் பற்றி மகாதேசாதிபதிக்கு ஆலோசனை வழங்கினர்
C. மகாதேசாதிபதியை நியமனம் செய்யும் வாய்ப்பினைப் பெற்றார்.
D. மக்களால் நேரடியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.
1) AB 2) BC 3) CD 4) AD

19) முதலாம் குடியரசு யாப்பு அறிமுகப்படுத்திய பாராளுமன்ற முறைமையில் நீதி தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட சபைகள்,
1) நீதி சேவை ஆணைக்குழு நீதிசேவைக்குழு
2) நீதி சேவை ஆணைக்குழு 3 அங்கத்தவர்கள்
3) நீதி சேவை ஆலோசனைச்சபை ஒழுக்காற்று சபை
4) நீதி சேவை ஒழுக்காற்றுசபை நீதிசேவை ஆணைக்குழு

20) மகாதேசாதிபதிக்கு பதில் ஜனாதிபதி என்ற பதம் பாவிக்கப்பட்டது போன்று முதலாங் குடியரசு யாப்பின் பொருத்தமான மற்றொரு மாற்றம்.
1) தேர்தல் முறையில் ஏற்பட்ட மாற்றம்
2) பாராளுமன்றத்திற்குப் பதில் தேசிய அரசுப் பேரவை
3) இலங்கைக் குடியரசின் பெயர் மாற்றம்
4) நியமன அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை

21) பின்வரும் அரசியல் யாப்புக்களையும் அதை உருவாக்கியவர்களின் பெயர்களையும் இணைக்கும் போது கிடைக்கும் சேர்மானம்.

| | |
|---|---|
| 1. 1927 | A கொஸ்வின் ஆர்.டி.சில்வா |
| 2. 1947 | B மனிங் |
| 3. 1921 | C ஐவர் ஜெனிங்ஸ் |
| 4. 1971 | D மனிங் டிவன்ஷர் |

1) BCDA 2) BDCA 3) DBAC 4) DABC

22) 1972ஆம் ஆண்டு யாப்பின் கீழ் பிரதம மந்திரிக்கு பொருத்தமான கூற்று,
1) அவசரகால நிலையினை பிரகடனப்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்வர்
2) போரையும் சமாதானத்தையும் பிரகடனம் செய்ய சனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் பொறுப்புடையவர்
3) அமைச்சர்களுக்குரிய துறைகளை தீர்மானிக்கும் பொறுப்புடையவர்
4) தேசிய அரசுப் பேரவையின் சபாநாயகரை நியமனம் செய்யும் பொறுப்புடையவர்

23) 1978ஆம் ஆண்டு யாப்பின் கீழ் பிரதம மந்திரியின் கடமைகளின் சேர்மானம்
A. ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார்
B. பாராளுமன்றத்திற்கு பொறுப்புச் சொல்லவேண்டியவர் அல்லர்
C. ஜனாதிபதிக்கு பொறுப்புச் சொல்லவேண்டியவர்
D. வெறுமனே அமைச்சரவையின் அங்கத்தவர் மட்டுமே
1) BCD 2) ACD 3) ABC 4) ADB

24) 1978ஆம் ஆண்டு யாப்பில் ஜனாதிபதி தெரிவு தொடர்பான சேர்மானம்
A. மாற்றுவாக்கினை அடிப்படையாகக் கொண்ட தேர்தல் முறையின் ஊடாக தெரிவுசெய்யப்படுகின்றார்.
B. பாராளுமன்ற அங்கத்தவர்களால் தெரிவுசெய்யப்படுகின்றார்
C. மகாதேசாதிபதி ஒரு மக்கள் தீர்ப்பின் போது தெரிவுசெய்யப்படுகின்றார்
D. நாடுமுழுவதற்குமான தேர்தல் தொகுதியினால் தெரிவுசெய்யப்படுகின்றார்
1) ABC 2) BCD 3) AB 4) AD

25) இலங்கையில் மாகாணசபை முறைமை
1) 1964ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தினால் ஏற்படுத்தப்பட்டது
2) இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க உருவாக்கப்பட்டது
3) ஜெ.ஆர்.ஜெயவர்த்தன ராஜீவ் காந்தி கூட்டினால் உருவாக்கப்பட்டது
4) 1978ஆம் ஆண்டின் யாப்பின் 13 ஆவது திருத்தத்தினால் உருவாக்கப்பட்டது

26) இலங்கையின் அரசியல் கட்சிகள் பற்றிய சேர்மானம்
A. தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதில் தோல்வி கண்டுள்ளன
B. இன்னும் நிறுவன மயமாக்கப்படவில்லை
C. இனத்துவ முறையில் பிளவுபட்டுள்ளன
D. சுதந்திரத்திற்குப் பின்னரே தோற்றம் பெற்றன
1) AB 2) CD 3) ABC 4) BCD

27) இந்திய -இலங்கை உறவுகள்,
1) தற்போதைய வட-கிழக்கு போரினால் பாதிக்கப்படவில்லை
2) சப்டா (CHAPTA) உடன்படிக்கையால் ஒரு புதிய கட்டத்தை அடைந்துள்ளது
3) இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு முக்கிய தூணாகும்
4) இந்தியா பாகிஸ்தான் முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளது.

28) சார்க் அமைப்பின் நோக்கங்கள்,
1) ஒத்துழைப்பின் ஊடாக சுய தங்கியிருத்தலை முன்னேற்றுதல்
2) இரு தரப்புச் சச்சரவுகளைத் தீர்த்தல்
3) சர்வதேச அரங்குகளில் நெருங்கிய உறவுகளை உருவாக்குதல்
4) மக்களின் வாழ்க்கை நிலையினை உயர்த்துதல்

29) இலங்கைக்கான தொழில்நுட்ப உதவித்திட்டங்கள்
1) பொதுநல அமைப்பினால் வழங்கப்படுகின்றன
2) ஐக்கிய நாடுகள் சபையால் வழங்கப்படுகின்றன
3) நாட்டுக்கு நன்மை பயக்கவில்லை
4) பொதுத்துறை உத்தியோகத்தருக்கு பயிற்சி வழங்குகிறது

30) 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 17ஆம் திருத்தத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுவது
1) வழக்கற்ற சுதந்திரமான நிர்வாகத்துறை
2) தேர்தல் ஆணையாளரை சிறப்பாகப் பாதுகாத்தல்
3) சங்கத்துறையினரும் நகர பாதுகாவலர்களினதும் நியமனத்தைச் சீர்செய்தல்
4) இலங்கையில் பொருளாதார மேம்பாடு

31) ஆள் ஒருவர் தனது அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்குத் தொடரத்தக்கது
1) 47ஆம் சரத்தின் படி மாவட்ட நீதிமன்றத்தில்
2) 7ஆம் சரத்தின் படி மேல் நீதிமன்றத்தில்
3) 12ஆம் சரத்தின்படி உச்சநீதிமன்றத்தில்
4) 14ஆம் சரத்தின்படி நீதவான் நீதிமன்றத்தில் (4ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளி விழாக் காணும் மரபு வழி தமிழ் வடமொழி புலமையாளர் திருமதி சாந்தா யசோதரன்

தமிழ், வடமொழி, வயலின் இசை ஆகிய மூன்று தளங்களிலும் சிறப்பாக மிளிர்வதோடு பெயருக்கேற்ற சாந்தம், அன்பு, அமைதி, அடக்கம், தெளிவு ஆகிய பண்பு



களைத் தன்னகத்தே கொண்டு, வாக்கும் வாழ்வும் ஒன்றாகக் கொண்டு வெள்ளிவிழாக்காணும் ஆசிரியை திருமதி சாந்தா யசோதரன் தனது தந்தையான தமிழறிஞர் வித்துவான் கலைமாணி இரத்தினசாமி பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களிடம் மரபுவழி தமிழ், வடமொழி பயிற்சியை பெற்றவர்.

யாழ் பல்கலைக்கழகத்தில் கலைமாணி சிறப்பு B.A(special) பட்டமும், வட இலங்கை சங்கீத சபை வயலின் இசைத் துறையில் ஆசிரியர்தராதரமும் சித்திப் பெற்ற திருமதி சாந்தா யசோதரன் 03.09.1951 இல் பிறந்து வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் பாடசாலையில் ஆரம்பக் கல்வியும், இராமநாதன் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப் பிரிவு ஆகியவற்றில் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சென்று தனது சிறப்பு கலைமாணிப் பட்டத்தை பெற்று 01.05.1983 இல் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியர் நியமனம் பெற்றார். மார்கா நிறுவன செயற்றிட்ட உதவியாளராகவும் கடமையாற்றினார். தமிழ், இந்து நாகரிகம் சைவசமயம், சமுகக் கல்வி போன்ற பாடங்களைக் கற்பித்ததோடு தமிழ்த்தினப் போட்டிகளில் இவரது மாணவர்கள் கோட்ட, வலய, மாவட்ட, தேசிய ரீதியில் பரிசில்களை பெற்றதோடு யாழ்ப்பாணக்கல்லூரி தமிழ்த்துறை தலைவராகவும், சைவ பரிபாலனசபையின் கல்லூரி இணைப்பாளராகவும், இல்ல ஆசிரியையாகவும் கடமையாற்றி பல மாணவர்களை உற்சாகப்படுத்தினார்.

டாக்டர்.
வெற்றிவேல் சக்திவேல்

தனது வயலின் இசை நிகழ்ச்சிகளை பல்கலைக்கழகம், யாழ்ப்பாணக்கல்லூரி, ஆலயங்கள்போன்ற பல்வேறு இடங்களில் நடத்தி பலரது பாராட்டை பெற்றார்.

# கிளிநொச்சி வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு

## பிரதி சுகாதாரப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி பிரைட்டன் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சியில் வைத்தியசாலையில் சில அத்தியாவசியப் மருந்துப்பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இவ் வருட காலாண்டிற்கு தேவையான மருந்து வகைகளின் ஒரு தொகுதி வந்து சேர்ந்துள்ள போதிலும் ஆஸ்மா, சயரோகம் ஆகிய நோய்களுக்கான மாத்திரைகள், சிறுவர்களுக்கான பாணி மருந்துகள். பனடோல் போன்ற மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக கிளிநொச்சி வைத்தியசாலையின் பிரதி சுகாதார பணியாளர் டாக்டர் பிரைட்டன் தெரிவித்தார்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் நிலைமை குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது.

கிளிநொச்சி வைத்தியசாலையில், நாளாந்த செயற்பாடுகள் மும்மடங்காக அதிகரித்துள்ளன. வெளிநோயாளர் பிரிவுகளில் பல் லாயிரக்கணக்கானோர் நாளாந்தம் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

அதேபோல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் பன்மடங்காக அதிகரித்துள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாதாந்தம் 15ஆயிரம் லீற்றர் டீசலும் 500 கலன் பெற்றோலும் தேவைப்படுகிறது.

இம்மாதத்திற்கு இதுவரை 2700லீற்றர் டீசல் மட்டுமே கிடைத்துள்ளது. கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முற்றுமுழுதாக ஜனரேட்டர்மூலமே மின்சாரம் பெறப்படுகிறது.

இவ் வைத்தியசாலையில் முக்கியமாக அவசர சிகிச்சைப்பிரிவு, சத்திரசிகிச்சைகள்பிரிவு, தீவிர கண் காணிப்புச்சிகிச்சை பிரிவு ஆகியன இயங்கி வருகின்றன. இதைத்தவிர முக்கியமா மருந்துவகைகள் குளிரூட்டிகளில் வைக்கப்பட்டுள்ளன.

மின்சாரம் தடைப்படும் பட்சத்தில் இந்த மருந்து வகைகள் அனைத்தும் பழுதடைந்துவிடும் அத்துடன் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பது பெரும் அபாய கரமான நிலைமை ஏற்படும். (அ-6)

# வடக்குக் கிழக்கில் கடந்த 2 வருடங்களில் இரண்டு இலட்சம் பேர் இடம்பெயர்வு

## அரசுக்கு 205 கோடி ரூபா செலவாம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் கடந்த 2 வருடங்களில் நிலவிய பதட்ட நிலை மற்றும் அசாதாரண சூழ்நிலை காரணமாக 52 ஆயிரத்து 958 குடும்பங்களைச் சேர்ந்த 1 இலட்சத்து 91ஆயிரத்து 278பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இதனால் அரசுக்கு 205கோடி ரூபா செலவு ஏற்பட்டுள்ளதாக அரசு அறிக்கையொன்று கூறுகிறது.

2007இல் 125கோடி 55இலட்சத்து 575 ரூபாவுக்கு 2008இல் 79 கோடி 77 இலட்சத்து 21ஆயிரத்து 142ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதாக அது தெரிவித்துள்ளது.

வன்னியில் மட்டும் கடந்த 2 வருடங்களில் நிலவிய பதட்ட நிலை மற்றும் அசாதாரண சூழ்நிலை காரணமாக 37ஆயிரத்து323 குடும்பங்களைச் சேர்ந்த 1இலட்சத்து 35ஆயிரத்து 308 பேர் இடம் பெயர்ந் துள்ளனர். இதனால் அரசுக்கு 109கோடி ரூபா செலவு ஏற்பட்டுள்ளதாக அரச அறிக்கையொன்று கூறுகிறது.

2007இல் 61 கோடி 59 இலட்சத்து 31 ஆயிரத்து 74 ரூபாவும் 2008 இல் 48 கோடி 38 இலட்சத்து 69 ஆயிரத்து 315 ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதாக அது தெரிவித்துள்ளது.

இதேவேளை வன்னியில் கடந்த 2வருடங்களில் நிலவிய பதட்ட நிலை மற்றும் அசாதாரண சூழ்நிலை காரணமாக 288 பாடசாலைகள் மூடப்பட்டு 46 ஆயிரத்து 398 மாணவர்கள் இடம் பெயர்ந்துள்ளதாக வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

58 ஆயிரத்து 203 ஏக்கர் வயல் நிலம் செய்கையில்லாமல் கைவிடப்பட்டுள்ளது. 1 இலட்சத்து 35 ஆயிரத்து 750 கால்நடைகள் கைநழுவிப் போயுள்ளன.

இதேவேளை படையினரால் 351 பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும் 557பொது மக்கள் காயப்பட்டுள் ளதாகவும் வடக்குகிழக்குமனித உரிமைகள் செயலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)


## யப்பான் சைக்கிள்

- சுகமான ஓட்டத்திற்கும்
- சுலபமான பாவனைக்கும்
- நீண்ட கால உபயோகத்திற்கும்
- பெண்கள், வயதானோர் இதய பலவீனமானோர் சுகமாக ஓடுவதற்கும் உரிய சைக்கிள்கள்
- சகல விதமான உதிரிப்பாகங்களும் உண்டு
- விற்பனைக்கு பின் சேவைகளும் உண்டு
- யாழ். குடாநாட்டில் எம்மிடம் மட்டுமே யப்பான் சைக்கிள்கள் விற்பனையாகின்றது




வடமராட்சியில் கிடைக்குமிடம்

சொலெக்ஸ் கேபிள்
60 பாகை கிணத்தடி, பருத்தித்துறை.

சித்திவிநாயகர் CYCLE CITY
K.K.S றோட், கொக்குவில்.
(மஞ்சவனப்பதி முருகன் கோவில் அருகில்)

(1607)


# நல்லூரான் திருவடிக்கு இன்று பதின்மூன்றாம் திருவிழா



## வண்ணமயிலேறி விரைந்தோடி வருவாய்!

வேங்கை மரமாக வந்துனக்கு
வள்ளியை துணையாய் தந்தான் உனதண்ணன் கணபதி
வருந்தும் உன் அடியவர் துயர் களைய
வண்ண மயிலேறி விரைந்தேகி
வன்னியூர் மாந்தர் பகை விரட்டி -உன் அடியாரை
மீட்டிடல் வேண்டும் ஐயா.
வேற்படை கொண்டே விரைந்தேகி பகை அழித்தே
அவர்களை காருமையா
நல்ல வேற் குமரரேசா அவர்
தொல்லைகள் தீர்ப்பாய் ஐயா

*ச. ஸ்ரீரங்கன்-ஆனைப்பந்தி*

## ஆண்டருள் பொழி நல்லைக்குமரா

மாண்புயர் வள நல்லை மாதவத்து மான்மிய
வாண்மை வடித்திடவும் வேண்டுவதோ!-ஆண்டருள்
பொழிநல்லை அழகன் பாலமுருகோன் திருவுருவை
விழிமலருள் வைத்தோம் வடித்து.

*டானியல் தேவமதுரம்*
*கலைஞானச் சுடர்*

## நிறைவாழ்வைத் தரவேண்டும்

கனதனம தோடு மிக்க புகழுமன வாழ்வு வந்து
ககன மிசை கவடி நல்ல -நிறைவாழ்வை
கடையனிவ னேனுங் கண்டு புவியின் மிசை வாழ நிந்தன்
கருணையதை நீயி ரங்கித் -தரவேணும்
நினதருளை ஈய விந்த நிலமதிசை வான தென்று
நிதமுயி லாடு கின்ற - நல்லூரில்
நிகரிலருள் வாரி நின்று திகழுமிரு மாதர் கொஞ்சு
நிருமலசொ ரூப கந்தப் -பெருமானே.

*நாயன்மார்கட்டு -இராசையா குகதாசன்.*

## குறையெலாம் தீர்க்கும் குமரன்

சரவணனே என்றழைக்க சஞ்சலங்கள் தீர்ப்பான்
வேலவனே என்றழைக்க வெவ்வினை தீர்ப்பான்
குமரா என்றழைக்க குறையெலாம் தீர்ப்பான்
கந்தா என்றழைக்க கவலையெலாம் தீர்ப்பான்
வள்ளிமணாளா என்றழைக்க வல்வினை யெலாம் தீர்ப்பான்
நல்லூரானே என்றழைக்க நம் குறையெலாம் தீர்ப்பான்.

*ச. திருமகள்-ஆனைக் கோட்டை.*

## வேகமாய் வந்திடய்யா

முருகப் பெருமானே
மூஷிக வாகனன் தம்பியே
பொருள் தேடும் இவ்வுலகில்
அருள் தேடி ஓடி வந்தோம்
இருள் சூழ்ந்த எம் வாழ்வை
இல்லாமல் ஒழிப்பதற்கு
வேலோடும் மயிலோடும் வேகமாய் வந்திடய்யா

*நடராசா சந்திரலிங்கம்*
*அச்சுவேலி. வடக்கு*

## சிந்தனை செய்

போற்றித் துதி மனமே
போற்றித் துதி மனமே
போர்க்காலத்திலும் உன்னை -மறவாமல்
போற்றித் துதி மனமே
சிந்தனை செய்ய அருள்வாய்
உந்தன் நாலது பெருவீதியில்
பெருமானை போற்றிக் துதி
மனமே முந்தும்.

*கேசவன்-நவாலி*

# தமிழர்களின் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தம் தீர்வாக அமையாது- இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச்சட்டமூலம் தீர்வாக அமையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமர் மன் மோகன்சிங் தம்மைச் சந்தித்தபோது 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்து வது பற்றிக் கலந்துரையாடவில்லையெனவும் எனினும், 13 ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு மேலதிகமான தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்க வேண்டும். எனவே அவர் கூறியிருப்பதாக ஊடகங்களின் செய்திகள் வெளியிடப்படிருந்ததாகவும் சம்பந்தன் கூறியுள்ளார்.

தமிழர்களின் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச்சட்டமூலம் ஒரு தீர்வாக அமையாது என்ற நிலைப்பாட்டிலேயே இந்தியா உள்ளது என்பதை இது தெளிவுபடுத்தியிருப்பதாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கியிருக்கும் பிரத்தியேக செவ்வியில் சம்பந்தன் தெரிவித்தார்.

### இலங்கை இந்திய ஒப்பந்ததுடன் 13ஆவது திருத்தத்தை குழப்பக்கூடாது

13ஆவது திருத்தச்சட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என 1987ஆம் ஆண்டே தமிழர் விடுதலைக்கூட்டணி முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவுக்கும், அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் தெளிவாகக் கூறியிருந்தது எனக் குறிப்பிட்ட சம்பந்தன், இலங்கை இந்திய ஒப்பந்தத்துடன் 13ஆவது திருத்தச்சட்ட மூலத்தைக் குழப்பக் கூடாது எனக்கூறினார்.

முதன் முதலில் தமிழ் பேசும் சிறுபான்மைத் தமிழர்களுக்கான உரிமையை வழங்கும் ஒப்பந்தமாக இலங்கை-இந்திய ஒப்பந்தமே அமைந்திருந்தது என்றார் அவர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பாரம்பரியங்களைக் கொண்ட தமிழ் பேசும் மக்களுக்கான மாகாணங்கள் என்பதையே இலங்கை இந்திய ஒப்பந்தம் எடுத்துக் கூறியிருந்தது எனச் சுட்டிக்காட்டிய இரா.சம்பந்தன் எனினும் 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தையும்த இலங்கை-இந்திய ஒப்பந்தத்தையும் குழப்பிக்கொள்ளக்கூடாது எனக் கூறினார்.



### பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐ.நா.சபை தொடர்ந்தும் உதவிகளை வழங்க வேண்டும்

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதல்களால் இடம்பெயர்ந்திருக்கும் மக்களுக்கான உதவிகளை ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் வழங்கவேண்டும் என இரா.சம்பந்தன் அந்த ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

விமானப்படையினரின் வான் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள் போன்றவற்றால் வன்னியில் ஆயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்திருப்பதாகவும், இவர்களுக்கான உதவிகளை ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்ந்தும் வழங்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

உண்மையில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் மக்களை இவ்வாறு நடத்தாது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் அந்த ஊடகத்துக்கு வழங் கிய செவ்வியில் மேலும் தெரிவித்தார். (அ-6)

## ஜோர்ஜியாவுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் ரஷ்யா கைச்சாத்து

(லண்டன்)

ஜோர்ஜியாவிலிருந்து பிரிந்து சென்ற பகுதியான தெற்கு ஒஸெட்டியா தொடர்பில் ஜோர்ஜியா மற்றும் ரஷ்யாவுக்குமிடையில் இடம்பெற்ற மோதலை முடிவுக்கு கொண்டு வரும் வகையிலான போர்நிறுத்த ஒப்பந்தத்தில் ஜோர்ஜியாவைத் தொடர்ந்து ரஷ்யாவும் கையெழுத்திட்டுள்ளது.

ஆறு அம்சங்களைக் கொண்ட இந்த சமாதான உடன்படிக்கையில் இடம் பெற்றுள்ள கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செயல்படுத் தப்படும் நேரத்தில் ஜோர்ஜியாவிலிருந்து ரஷ்யப் படைகள் வெளியேறுமென ரஷ்ய வெளியு றவு அமைச்சர் செர்ஜி லவ்ரொவ் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த ஏற்பாடுகள் என்ன வென்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் குறிப்பிட்டுச் சொல்லவில்லையானாலும் ஜோர்ஜியா தொடர்ந்து ஏற்படுத்தும் பிரச்சினைகளெனக் குறிப்பிட்டு இவை காரணமாக கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் அவசியமென்று லவ்ரொவ் குறிப்பிட்டுள்ளார். அவசியமுள்ள காலகட்டத்துக்கு ரஷ்ய இராணுவத்தினர் ஜோர்ஜியாவில் தொடர்ந்தும் தங்கியிருப்பார்களென்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில் ரஷ்யா போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதை ஒரு நம்பிக்கையூட்டும் முன்னேற்றமெனக் கூறி ஜனாதிபதி புஷ் வரவேற்றுள்ளார். அத்துடன் ரஷ்யா இனிமேல் தனது இராணுவத்தினரை விலக்கிக் கொள்ள வேண்டுமெனவும், தெற்கு ஒஸெட்டியா மற்றும் அப்காஸியாவும் ஜோர்ஜியாவின் அங்கமாக நீடிக்க வேண்டுமெனவும் அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜோர்ஜியாவுக்குள் தங்களுடைய இராணுவ நடவடிக்கைகளை ரஷ்ய இராணுவத்தினர் அதிகரித்துள்ளனர் எனவும் ஜோர்ஜியத் தலைநகர் ரிபிலிசியிலிருந்து சுமார் 35கிலோ மீற்றர் தொலைவிற்குள்ளாகவே ரஷ்ய இராணுவத்தினர் காணப்படுவதாக பிபிசி செய்திச்சேவை தெரிக்கின்றது. (அ-6)

## மிஹின் எயாரை மீண்டும் இயக்க ஜனாதிபதி உத்தரவு!

(கொழும்பு)

பாரிய நட்டங்களுக்கு உள்ளாகித் தமது சேவையை நிறுத்திக்கொண்ட மிஹின் எயார் விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதற்காக மகநெகும என்ற திட்டத்தின் கீழ் 400மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவிடவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

அத்துடன் புதியவர் ஒருவரை இந்தச் சேவைக்குப் பணிப்பாளராக நியமிக்கவுள்ள ஜனாதிபதி அவ்ரை மேலும் 400மில்லியன் டொலர்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் கூறியுள்ளார்.

ஏற்கனவே இலங்கையின் அரசாங்க நிதியில் இயங்கிய மிஹின் எயார் விமான சேவை சுமார் 2 பில்லியன் ரூபாய்கள் வரையில் நட்டமடைந்ததுடன் அந்தச் சேவையில் இணைக்கப்பட்டிருந்த பல விமானங்களும் வாடகை விமான நிறுவனங்களால் பலாத்காரமாக எடுத்துச் செல்லப்பட்டன. (அ-6)

## விடுதலைப் புலிகள் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவார்களா? -லக்பிம நாளேடு ஆய்வு

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப்புலிகள் தற்போதைய யுத்தத்தில் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவார்களா? என்பது குறித்து லக்பிம நாளேடு ஆராய்ந்துள்ளது.

தமிழீழவிடுதலைப்புலிகளின் முன்னாள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், முன்னர் இந்த இரசாயன ஆயு தங்கள் தொடர்பாக் கருத்துரைத்திருந்ததாக லக்பிம குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் தாம் இயக்கத்தில் இருந்தபோது அமோனியம் நைதரேட்டை அடிப்படையாகக்கொண்ட இரசாயன ஆயுதங்களை இறக்குமதி செய்யப்பட்டதாகவும் எனினும் அதனை அவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து தனக்குத்தெரியாது என்று கருணா தெரிவித்ததாக லக்பிம கூறியுள்ளது.

அவ்வாறு தமிழீழவிடுதலைப்புலிகள் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தினால் அது படையினருக்கும் தமிழீழவிடுதலைப் புலிகளுக்கும் ஆபத்தை உண்டாக்கும் என படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தமிழீழவிடுதலைப் புலிகள் தற்போது கேணல் தீபன் தலைமையில் வன்னியில் யுத்தத்தை மேற்கொண்டு வருவதாகத்தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த யூலை 29ஆம் திகதி படையினரின் ஆழ ஊடுருவும் பிரிவினர் தாக்குதல் நடத்துவதாக வன்னியின் மாங்குளம் மற்றும் கொக்காவில் பகுதிகளுக்குச் சென்ற வேளையில் தமிழீழவிடுதலைப்பெ புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதாகக் குறிப்பிட்டுள்ளது.

இதில் இரண்டு படையினர் கொல்லப் பட்டனர். ஏனைய நால்வர் இலங்கை வான்படையினரின் உலங்கு வானூர்தியினால் காப்பாற்றப்பட்டதாகவும் லக்பிம தெரிவித்துள்ளது.(அ-6)

## பாடசாலைக்கு துப்பாக்கி கொண்டுவர அமெரிக்காவில் ஆசிரியர்களுக்கு அனுமதி

(ஹூஸ்டன்)

அமெரிக்காவில் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் துப்பாக்கி கொண்டுவர அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து டெக்சாஸ் மாகாண கண்காணிப்பாளர் டேவிட்திவீட் கூறுகையில்,

அமெரிக்காவில் சமீப காலமாக பாடசாலைகளில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் காரணமாக ஆசிரியர்கள் தங்களது பாதுகாப்பிற்காக வகுப்பறைக்கு துப்பாக்கி கொண்டு வர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையின் பாதுகாப்பிற்காக கண்காணிப்புக்கமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. விருப்பமுள்ள ஆசிரியர்கள் பாடசாலை முறையான அனுமதி மற்றும் பயிற்சி பெற்று வகுப்பறைகளுக்கு துப்பாக்கிகொண்டு வரலாம்.

டெக்சாஸ் மாகாணத்தில் அமைந்துள்ள ஹரால்டு பாடசாலை தான் முதல் முறையாக ஆசிரியர்கள் வகுப்பறைக்கு துப்பாக்கி கொண்டு வர அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதற்குப்பெற்றோர் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்று கூறினார்.

அமெரிக்கா பாராளுமன்றம் , பாடசாலைகளுக்கு துப்பாக்கி கொண்டுவருவதை தடை செய்துள்ளது. ஆனால் அமெரிக்கா சுப்ரிங்கோட் இந்த சட்டவிதியைத்தளர்த்தியது டெக்சாஸ் மாகாண சட்டப்படி பாடசாலை அனுமதியில்லாமல் வகுப்புகளுக்குதுப்பாக்கிகொண்டு வருவது தடை செய்யப்பட்டுள்ளது. (அ-6)

## சொத்து மோசடியில் தேச நிர்மாண அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன?

(கொழும்பு)

தேச நிர்மாண அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன சுமார் 450 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களை மோசடி செய்துள்ளதாகப் பிரபல ஆங்கில நாளேடொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கணக்கு விபரங்களுக்கு உட்படுத்தப்படாத 450 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களை அமைச்சர் உடமையாகக் கொண்டிருப்பதாகப் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்த மோசடி தொடர்பான மூன்று முறைப்பாடுகள் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவிற்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

2001ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் தனது சொத்து விபரங்களை சமர்ப்பித் திருக்கவில்லை எனத் தெரியவருகிறது. எனினும் தம் மீதான குற்றச்சாட்டுக்கள் அடிப் படையற்றவை என அமைச்சர் தெரிவித் துள் ளார்.

முறைப்பாடுகள் தொடர்பாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் இரண்டு தடவைகள் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டபோதிலும் அமைச்சர் விசாரணை ஆணைக் குழுவின்முன் ஆஜராகவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. (அ-6)

## மேர்வினுக்கு எதிரான நம்பிக்கை இல்லா தீர்மானத்திற்கு அமைச்சர்கள் ஆதரவு

(கொழும்பு)

தொழிற்துறை அமைச்சர் மேர்வின் சில்லாவிற்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு ஆளுங்கட்சி அமைச்சர்கள் பலர் ஆதரவு தெரிவித்துள்ளதாக இரகசியத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆளுங்கட்சியின் முக்கிய அமைச்சர் ஒருவரின் தலைமயில் இது தொடர்பாக அண்மையில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் துர் நடத்தைகளுக்கு எதிராக ஜனாதிபதி மஹிந் ராஜபக்ஷ எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் ஆளுங்கட்சி அமைச்சர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளனர்.

இந்த நிலைமை ஆளுங்கூட்டணி கட்சியில் உட்பூசலை ஏற்படுத்தக் கூடுமென லக்பிம நாளேட்டின் ஞாயிறு இதழ் சுட்டிக்காட்டியுள்ளது. மேர்வின் சில்வாவிற்கு எதிராக தொடர்ந்தும் அரசாங்கம் மௌனம் சாதித்தால் எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றை நிறைவேற்றும் என ஐக்கிய தேசியக் கட்சி அண்மையில் தெரிவித்திருந்தது. (அ-6)

தைரியம், சுறுசுறுப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை இந் நான்கும் ஒரு மனிதனை மேன்மை அடையச் செய்யும்.

–சுவாமி இராமதாசர்

வலம்புரி

## திருவானந்தபுரத்துத் தேர் இருப்புக்கு வந்ததுபோல் 5ஆந் தரப் புலமைப் பரீட்சை நடந்து முடிந்தது

நாடு பூராகவும் 5ஆந் தரப் புலமைப் பரீட்சை நேற்றைய தினம் நடந்து முடிந்தது.

க.பொ.த (சா/த) பரீட்சை, உயர்தரப் பரீட்சைக்கு இல்லாத முக்கியத்துவம் 5ஆந் தரப் புலமைப் பரீட்சைக்கு உண்டு.

பிரபல்யமான பாடசாலைகளில் அனுமதி பெற்றுக்கொள்வதன் பொருட்டு 5ஆந் தரப் புலமைப் பரீட்சையில் மாணவர்கள் மட்டுமன்றி பெற்றோர்களும் அதீத கவனம் கொண்டுள்ளனர்.

சுருங்கக் கூறின் பெற்றோரும் புலமைப் பரீட்சைக்காக ஓடிஓடி கற்கிறார்கள்.

இதில் வேதனை என்னவெனில் 5ஆந் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் தாங்க முடியாத பளுவைச் சுமப்பதாகும். பாடசாலை, தனியார் கல்வி நிறுவனம் அதனை விட விசேட வகுப்புகள் என 5ஆந் தர மாணவர்களுக்கு ஓய்வே கிடையாது.

இதற்கு மேலாக பெற்றோரின் அதட்டல், அடி, திட்டு என அத்தனை தாக்குதல்களையும் அந்தப் பிஞ்சுகள் தாங்கிக் கொள்ளவேண்டியதாகவுள்ளது.

5ஆந் தரப் புலமைப் பரீட்சைக்கு இத்துணை போட்டியை வைத்ததனால் பிள்ளைகளின் உளம் பாதிப்படைவதும் அதனால் அவர்களின் எதிர்கால சிந்தனை ஆற்றல்கள் –ஆளுமைப் பண்புகள் பாதிக்கப்படுவதும் தவிர்க்க முடியாததாகின்றது.

உளவியல் பற்றிய சிந்தனைகள் மேலெழுந்துள்ள இக்கால கட்டத்தில் கல்வித் திணைக்களம் –தேசிய கல்வி நிறுவகம் –பல்கலைக்கழகம் –புத்திஜீவிகள் என்ற கல்விப் புலம் சார் வித்தகர்கள் இது பற்றி சிந்திக்காமல் இருப்பது வேடிக்கைக்கும் வேதனைக்குமுரியதாகும்.

அதேநேரம் 5ஆந் தரப் புலமைப் பரீட்சையில் மிகக் கூடிய கவனமெடுக்கும் பெற்றோர் அந்தப் பரீட்சை முடிந்தவுடன் தமது கடமை முடிபடைந்து விட்டதாக எண்ணிக் கொள்கிறார்கள்.

இதனால் 6ஆந் தரத்திற்கு அப்பால் மாணவர்களின் கல்விச் செயற்பாடு மந்த நிலை அடைந்து போவதைக் காணமுடிகின்றது.

எனவே 5ஆந் தரப் புலமைப் பரீட்சைக்காக தம் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொண்டுள்ள பெற்றோர் அதே கண்காணிப்பை, ஊக்கத்தைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டும்.

இல்லையேல் நிலைமை மிக மோசமாக பாதிப்படையும். கடந்த காலங்களில் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பற்றிய தரவுகளை எடுத்துக் கொண்டு அவர்களில் எத்தனை வீதமானவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளார்கள் என மதிப்பீடு செய்யப்படுமாயின் அதிர்ச்சி தரும் தகவல்களே காத்திருக்கும்.

இதற்கெல்லாம் காரணம் 5ஆந் தரத்துடன் பெற்றோரின் கண்காணிப்பும், ஊக்குவித்தலும் பூச்சிய நிலையை அடைவதாகும். எனவே பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் கல்வியில் ஒழுங்கு சீரான கண்காணிப்பை எடுத்தாக வேண்டும்.

# தேர்தல் வன்முறைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க ஆதாரங்கள் இல்லை

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கான தேர்தல்கள் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதிகரித்திருக்கும் தேர்தல் வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக வழக்குத்தாக்கல் செய்வதற்கு போதிய அளவு ஆதாரங்கள் இல்லை என தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

தேர்தல் வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளபோதிலும் அவற்றுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்காதிருப்பதற்கு தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களான பவ்ரல் மற்றும் தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் என்பன தீர்மானித்துள்ளன.

எனினும் தொடர்ந்து இடம்பெறும் வன்முறைகளைப் பொறுத்தே அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி முடிவெடுக்கப்படும் என அந்த அமைப்புக்கள் கூறியுள்ளன.

அதிகரித்திருக்கும் தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்கள் தேர்தலை குழப்பும் நடவடிக்கைகளாக இருந்தாலும் தேர்தல் தினத்தன்று வாக்குமோசடிகள் இடம்பெறுவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாகவும் பவ்ரல் அமைப்பின் ஏற்பாட்டாளர் கிங்ஸ்லி றொட்றிகோ தெரிவித்துள்ளார்.

எனினும் இவற்றுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்காதிருக்க தீர்மானித்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற அறிக்கைகள் அரசாங்கம் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் உரிய தரப்பினரிடம் கையளிக்கப்பட்டுள்ள போதும் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்வதற்கு போதிய ளவு ஆதாரங்கள் இல்லை என இரண்டு அமைப்புக்களும் கூறியுள்ளன.

பவ்ரல் அமைப்பின் தகவலின் படி அவர்களுக்குக்கிடைக்கப்பெற்ற 120 தேர்தல் முறைப்பாடுகளில் 78 முறைப்பாடுகள் வட மத்திய மாகாணத்திலிருந்தும் எஞ்சியவை சப்ரகமுவ மாகாணத்தில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த முறைப்பாடுகளை அவற்றின் தீவிரத்தன்மையை அடிப்படையாகக்கொண்டு தரம் பிரிப்பது கடினமானது. எனினும் இதுவரை 35 தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாகவும் 14 அச்சுறுத்தல்கள் 27 சட்டவிரோதப் பயன்பாடுகள் தொடர்பான முறைப்பாடுகளும் 29 வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவற்றில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முறைப்பாடுகள் எதுவும் இல்லை என கிங்ஸ்லி றொட்றிகோ கூறியுள்ளார்.

அதேநேரம் தேர்தல் வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக தமக்குக் கிடைக்கப்பெற்ற 136 முறைப்பாடுகளில் அநுராதபுரத்திலிருந்து 63 முறைப்பாடுகளும், பொலனறுவையில் இருந்து 21 முறைப்பாடுகளும் எஞ்சியவை கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலிருந்து கிடைத்த முறைப்பாடுகள் எனவும் தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையம் அறிவித்துள்ளது. (அ-6)

## கொழும்பில் வீடு வீடாகத் தேடுதல்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முதல் வீடு வீடாகத் தேடுதல் நடந்தும் நட வடிக்கை ஒன்றைப்படையினர் மேற் கொண்டுள்ளதாக தெரிவிக் கப்படு கிறது. காலிபூஸா முகாமில் உள்ள சந்தேக நபரிடம் இருந்து பெறப் பட்டதாக கூறப்படும் தகவலை யடுத்தே இந்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதன் போது சுமார் 18ஆயிரம் படையினர் தேடுதல் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகி யுள்ளன.

கொழும்பில் தற்கொலைப் பேரணி களில் ஊடுருவல் என்ற தகவலை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (அ-6)

# அதிபர் ஆசிரியர் சம்பள முரண்பாட்டுக்கு அடுத்த மாதம் முதல் இடைக்காலத் தீர்வு

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த மாதம் தொடக்கம் இலங்கை ஆசிரியர் மற்றும் அதிபர் சேவைகளில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நீக்க அரசாங்கம் ஒழுங்கு செய்யவுள்ளதாக கல்வி அமைச்சின் ஊடக செயலாளர் ஜெயவீர தெல்கொட தெரிவித்துள்ளார்.

இறுதித் தீர்வு எட்டும் வரை செப்ரெம்பர் மாதத்திலிருந்து இடைக்காலத் தீர்வு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் 2 இலட்சத்து 15ஆயிரம் ஆசியர்களும், 9 ஆயிரத்து 700 அதிபர்களும் நன்மை அடைவார்கள் என கல்வித் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் செயலாளர், சம்பள ஆணைக்குழு, நிதி அமைச்சு மற்றும் பொதுச் சேவைகள் ஆணைக்குழு அதிகாரிகள் கொண்ட விசேட அமர்விலேயே இடைக் காலத் தீர்வினை நடைமுறைப்படுத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வமர்வில் ஆசிரியர் மற்றும் அதிபர் சேவையினரால் 1994ஆம் ஆண்டு ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பப்பட்ட ஆலோசனைகள் கவனத்தில் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# அளவுக்கு அதிகமாக பாடநூல்கள் அச்சு அமைச்சுக்கு 12 கோடி ரூபா நஷ்டம்

(கொழும்பு)

பாடநூல்கள் அளவுக்கதிகமாக அச்சிடப்பட்டதால் கல்வி அமைச்சுக்கு 12கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் பாடல் நூல் ஆணையாளர் என்.புஸ்பகுமார தெரிவித்தார். இதற்கிடையில் இவ்வருடத்திற்கான தமிழ்ப் பாடநூல்கள் இன்னும் முற்றாக விநியோகிக்கப்படவில்லை.

அளவுக்கதிகமாக அச்சிடப்பட்ட பாடநூல்கள் மாணவர்களால் பயன்படுத்தப்படாமல் வாழைச்சேனை காகித ஆலையில் 9 வருடங்களாக தேங்கிக் கிடகின்ற தகவலும் கசிந்துள்ளது.

அளவுக்கதிகமாக அச்சிடப்பட்டு மாணவர்களால் பயன்படுத்தப்படாமல் சுமார் 25லட்சம் பாடநூல்கள் தேங்கிக் கிடப்பதாகத் தெரியவந்துள்ளது.

இதன் பெறுமதி 12கோடி ரூபாவுக்கு மேல் என மதிப்பிடப் பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சின் பாடநூல் ஆணையாளர் என்.புஸ்பகுமார தெரிவித்தார்.

மாணவர்களால் பயன்படுத்தப்படாமலிருந்து சுமார் 25லட்சம் பாடநூல்களை வாழைச்சேனை காகித ஆலைக்கு அனுப்பி வைக்க 12 இலட்சம் ரூபா ஏற்பட்டுள்ளதாம்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனை விசாரிக்கவெனக் குழுவொன்றை நியமித்துள்ளார். விசாரணை நடை பெற்று வருகிறது. இதனிடையில் அடுத்த வருடத் திற்கான பாடநூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளர்.

இதே வேளை 2008ஆம் ஆண்டுக்குரிய தமிழ்ப் பாடநூல்கள் இன்னும் முற்றாக விநியோகிக்கப்படாத நிலையில் அடுத்த வருடத்திற்கான பாடநூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ-5)

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும் (78)

ஓலைச் சுவடி

### சுயப்புகழ்ச்சி ஏன் செய்யக்கூடாது?

ஒரு போதும் சுயப் புகழ்ச்சி செய்வதற்காக காலத்தை வீணாக்கலாகாது என்று விவேகமுள்ளவர்கள் சொன்னதுண்டு. தன்னைக் குறித்துள்ள மேன்மைகளும் வீரக் கதைகளும் விவரித்துக்கொண்டிருக்கச் சிலர் அதிக நேரம் செலவிடுகின்றனர். மேலும் உரையாடலுக்கிடையில் தேவையில்லாமல் நான் நான் என்று புலம்பிக்கொண்டிருப்பார்கள்.

இப்படி தன்னில் மட்டும் மையப்படுத்திப் பேசுபவர்கள் தன்னை மிதமிஞ்சி மதிக்கவும் தன் மகிமையைப் பற்றி தவறான எண்ணம் கொண்டிருக்கவும் அதன் விளைவாக மனது கெட்டுப் போகவும் கூடும் என்று மனநூல் சுட்டிக் காட்டுகின்றது. சுயப்புகழ்ச்சி ஒரு போதும் சுய நம்பிக்கையை வளர்ப்பதில்லை என்றும் கண்டறிந்துள்ளனர்.

# கலைத்திறன் ஆர்வம் கொண்டவர்களுக்கு வாய்ப்புகளை அள்ளித்தரும் வீடியோ எடிட்டிங்

பொழுதுபோக்கு மற்றும் மீடியா துறைகளில் பணியாற்றும் ஆர்வம் மிக்க கலைத் திறன் கொண்டவர்களுக்கு வீடியோ எடிட்டிங் துறை வாய்ப்புக்களை அள்ளித் தரும் துறையாகத் திகழ்கிறது.

ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட வீடியோக் காட்சிகளை மாற்றியமைப் பது மற்றும் மறுசீரமைப்பதன் மூலமாக புதிய வடிவமிக்க வீடியோக்களாக மாற்றுவது தொடர்புடைய பணிகளே வீடியோ எடிட்டிங் துறையின் அடிப்படைப் பணியாகும். கலை நயமிக்க வீடியோ வடிவங்கள் இதனால் தான் உருவாகின்றன.

தயாரிப்புப் பணிக ளுக்குப் பின் முக்கிய பணியாக வீடியோ எடிட்டிங் திகழ்கிறது. ஒரு வீடியோ எடிட்டராக இருப்பவர் பின்னணி இசையை எடிட் செய்வது, படம் மற்றும் வீடியோக் காட்சிகளை எடிட் செய்து திரையில் கொண்டு வருவது போன்ற முக்கிய பணிகளைச் செய்ய வேண் டியிருக்கிறது.


லீனியர் எடிட்டிங், நான் லீனியர் எடிட்டிங் மற்றும் டிஜிட்டல் வீடியோ எடிட்டிங் என்னும் மூன்று பிரிவுகள் இதில் உள்ளன. டிஜிட்டல் வீடியோ எடிட்டிங் முறையில் கணனியின் உதவியுடன் திரைக்காட்சிகள் எடிட்டிங் செய்யப்படுகின்றன.

நான் லீனியர் எடிட்டிங் முறையில் ஓடியோ மற்றும் வீடியோக்கள் கணனியின் நினைவடுக்கில் பதியப்பட்டு பின்பு தனி சொப்ட்வேயர் உதவியுடன் எடிட் செய்யப்படுகின்றன.

இன்று அதிகரித்துக் கொண்டே வரும் திரைப்பதிவுகள், வீடியோக் கார்ட்சிகள் மற்றும் இன்டர்நெட் தளங்களின் விளை வாக வீடியோ எடிட்டிங் துறையில் புதிது புதிதான பல்வேறு வாய்ப்புகள் உரு வாகிக் கொண்டே வருகின்றன.


கடுமையான போட்டியை இது உள்ளடக் கியிருப்பதால் இத் துறையை தேர்வுசெய்பவர்கள், அதற்குத் தேவைப்படும் திறன்களோடு எப்போதும் தயாராக இருப்பது முக்கியம். வீடியோ எடிட் டிங் தெரிந்தவருக்கு 'டிவி' மற்றும் திரைப் படத் தயாரிப்பு ஸ்டுடியோக்களிலும் விளம் பரம் மற்றும் மல்ரி மீடியா நிறுவனங்களிலும் இன்டர்நெட் தளங்களை உருவாக்கும் நிறு வனங்களிலும் அதிகளவு தேவை இருக்கிறது .

மேலும், தனியார் தயாரிப்பு நிறுவனங்களில் இணைந்து திரைப் படங்களை உருவாக்கும் பணியிலும் தேவை இருக்கிறது. பொதுவாக, இத்துறையின் திறனாளர்கள் 'டிவி', திரைப்பட நிறுவனங்களில் பணியாற்றுகின்றார்கள்.



இதுஅனைவருக்கும் பொதுவான துறையாக இருக்கிறது. இதற்கென குறைந்தபட்ச கல்வித் தகுதிகள் தேவையில்லை . எனினும், இதில் சிறப்பாக மேம்பட வீடியோ 'எடிட்டிங், சவுண்ட் ரெக்கோடிங், நான் லீனியர் எடிட்டிங் இவற்றில் டிப்ளோமா அல்லது சான்றிதழ் படிப்பு ஒன்றை படித்தி ருப்பது விரும்பத் தக்கது.

இவை அனைத்தி லும் எடிட்டிங்பற்றிய அடிப் படைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.



**ஆர்.யூ.பாலமுருகன்**

இந்தப் படிப்புகளை இந்தியா வில் பல கல்வி நிறுவனங்கள் அளிக்கின்றன. டில்லி அருகே நொய்டாவில் உள்ள ஏசியன் அகாடமி ஒப் பிலிம் அண்ட் 'டிவி' என்னும் மையத்தில் இந்தப் படிப்புகளை படிக்கலாம். டில்லியில் உள்ள போர்க்சூன் இன்ஸ் டிடியூட் ஒப் கம்யூனிகேஷன். இத் துறையில் சிறப்புப் படிப்புகளை பெறலாம்.

இத்துறையின் முக்கிய நவீன பிரிவான மீடியா ஆர்ட்ஸ் அன்ட் அனிமேஷன் பிரிவில் பட்டப்படிப்பு அல்லது பட்டமேற்படிப்பை படிக்கலாம். இத்துறையில் சிறந்து விளங்க அடிப்படையிலேயே ஒருவர் தானாகவே திறம்பட செயல்படும் உந்து சக்தியையும், கிரியேட்டிவ் ஆர்வத்தையும் பெற்றிருக்க வேண்டும்.


எதையும் கூர்ந்து கவனித்து விபரமறியும் சுபாவம், கமராக்கள் பற்றிய அடிப்படையான பொதுஅறிவு மற்றும் அர்ப்பணிப்புக் குணம் ஆகியவற்றை பெற்றிருப்பவர்கள் இதில் மிளிரலாம்.

படித்திருப்பதால் மட்டுமே ஒருவர் வெற்றி பெறமுடியாது என்பதையும், துறையின் நுணுக்கங்களை இயல்பான தனது கிரியேட்டிவ் திறன்களோடு இணைத்துக் கொண்டால் மட்டுமே ஒருவர் சிறப்பான பணி வாய்ப்பைப் பெறமுடியும் என்பதையும் நன்றாக மனதில் கொண்டு இத் துறையில் நுழைவது பற்றிய முடிபை நாம் எடுக்க வேண்டும்.

# 2010 இல் விண்டோஸ் 7 பதிப்பு வெளிவருகிறது

**கணனி உலகில்**

மைக்ரோசொப்ட் நிறுவனம் சார்பில் தனது வாடிக்கைநிறுவனங்களுக்கு அண்மையில் 'விண்டோஸ் வரைபடத்தில் இன்னொரு மைல்கல்' என்ற தலைப்பில் கடிதம் ஒன்ற அனுப்பப்பட்டிருந்தது.




அதில் விண்டோஸ் 7 என்னும் மாபெரும் ஒப்பரேட்டிங் சிஸ்டம் வரும். 2010 ஜனவரியில் வெளிவரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது இன்னும் 18 மாதங்களில் விஸ்டாவிற்கு அடுத்த ஒப்பரேட்டிங் சிஸ்டம் வரப் போகிறது.

எக்ஸ்பிக்கும் , விஸ்டாவிற்கும் இடையே 5 ஆண்டுகள் இடைவெளி இருந்தது.




தற்போது இதனைக் குறைத்து புதிய சிஸ்டம் வர இருக்கிறது. இதுவிஸ்டா போல் பகுதி, பகுதியாக இல்லாமல் தொடர்ந்து ஒரே தொகுப்பாக உள்ளது. விஸ்டாவிற்கும், அதற்கு முந்தைய தொகுப்புகளுக்கும் இடையே பைல்களுக்கான இணைந்து செல்லும் இயக்கம் இருக்கவில்லை.

இதனால், பல வாடிக்கையாளர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். விஸ்டா பெரியளவிற்கு பிரபலமடையாததற்கான காரணங்களில் அதுவும் ஒன்றாகும். எனவே, விஸ்டா உருவான அதே கட்டமைப்பில் தான் விண்டோஸ் 7 பதிப்பும் உருவாகி வருகிறது. இதனால், விஸ்டா மற்றும் எக்ஸ்பி தொகுப்புக்கும், விண்டோஸ் 7 பதிப்பிற்கும் இடையே இணைந்த செயல்பாடு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கையின் பொருளாதார சமூக புள்ளிவிபரங்கள்-2008

## மத்தியவங்கியில் வெளியிடப்பட்டது

**பொருளாதாரம்**

இலங்கை மத்திய வங்கி, இலங்கையின் சமூக பொருளாதார தரவுகள்-2008 என்ற அதன் அண்மைய தரவு ஏட்டினைத் தற்பொழுது வெளியிட்டிருக்கின்றது. இத்தொடரில் இது 31 ஆவது தொகுதியாகும்.

100 பக்கங்கள் கொண்ட இத்தொகுதி இலங்கையின் சமூக பொருளாதார நிலைமைகள், மனித வளங்கள், தேசியகணக்குகள், வேளாண்மை, கைத்தொழில், உட் கட்ட மைப்பு, விலைகளும் கூலிகளும், வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் சுற்றுலா, வெளிநாட்டு நிதி, அரச நிதி, பணமும் வங்கித் தொழிலும் மற்றும் நிதி தொடர்பான ஆகப் பிந்திய தகவலை உள்ளடக்கிய 88 புள்ளி விபர அட்டவணைகளையும், 12 வரைபடங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இவ்வெளியீடு, வேளாண்மை, மீன்பிடிக் கைத்தொழில், மின்வலுப் பணிகள், நீர்ப்பாவனை மற்றும் வருமானம், அஞ்சல் பணிகள், தொலைத்தொடர்பூட்டல் பணிகள் மற்றும் போக்குவரத்துப் பணிகள் என்பன மீது கிடைக்கத்தக்கதாகவுள்ள ஆகப் பிந்திய தரவுடன் 2007 ஆம் ஆண்டுக்கான ஆகப் பிந்திய மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி புள்ளிவிபரத்தை வழங்குகிறது. இத் தொகுதியானது குடிப்பரம்பல், சமூகக் குறிகாட்டிகள், தேசிய கணக்குகள் வேளாண்மை மற்றும் கைத்தொழில் நாணயம் மற்றும் குறிக்காட்டி, வெளிநாட்டு வர்த்தகம் நிதி மற்றும் பணவீக்கம் ஆகிய முக்கிய சமூகப் பொருளாதார மாறிகளை சார்க் மற்றும் கிழக்காசிய பிராந்திய நாடுகளின் ஒப்பீட்டுடன் தரு கிறது. இவ்வெளியீடு தற்போது தேவைப்படும் சமூக பொருளாதார தரவின் அனேகமானவற்றை சுருக்கமாகத் தருவதால் இது கொள்கை வகுப்போர் ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ள தாகவிருக்கும்.

# புதிய மெயில் எங்கிருந்து வந்தது என கண்டுபிடிப்பது எப்படி?

**இவ்வார இணையத்தளம்**

கூகுள் தரும ஜிமெயில புரோகிராமைத் தொடர்ந்து பயன்படுத்துபவர்களுக்கு ஸ்பேம் மெயில் அல்லது புதிய இ-மெயில் எங்கிருந்து வந்தது என அறிந்துகொள்ள ஆவலா? இதுபற்றி அடிப்படை விபரங்கள் இ-மெயி லில் ஹெடரில் இருக்கும். முதலில் எந்த இ-மெயில் குறித்து தெரிய விரும்புகிறீர் களோ, அந்த இ-மெயில் மெசேஜை திறந்து கொள் ளவும். அதன்பின் மேலாக வலது மூலையைப் பார்க்கவும். அங்கு ஒரு அம்புக் குறி இருக்கும்.

அதை "கிளிக்" செய்திட்டால் கீழ் நோக்கி ஒரு மெனு விரியும். இதில், show original என்பதில் கிளிக் செய்திடவும். உங்களுக்குத் தேவை, அந்த இ-மெயில் அனுப்பப்பட்ட ஐ.பி. முகவரி தான். அந்தக் குழப்பமான முகவரிதான். அந்தக் குழப்பமான வரிசைகளை உற்றுநோக்கினால் ஐ.பி. முகவரியினை கண்டறியலாம். பின்னர் இது யாரிட மிருந்து எங்கிருந்து அனுப்பப்பட் டது என்று இன்னும் விபரமாகத் தெரியவேண்டுமெனில், www.who.is என்றமுகவரியில்உள்ள தளத்திற்கு செல்லவும். அங்கு ஐ.பி. முகவரி யினை டைப் செய்ய வேண்டிய இடம் ஒன்று இருக்கும். அதில், இந்த ஐ.பி., முகவரியினை செய்திடவும் .உடனடியாக உங்களுக்கு யாரி டமிருந்து இந்த இ-மெயில்மெசேஜ்வந்தது என்ற விபரம் கிடைக்கும்.

## நினைத்ததை முடிப்பவன் நான்

# ஒலிம்பிக் ஒன்றில் 8 தங்கம் வென்று வரலாற்று சாதனை படைத்தார் பெல்ப்ஸ்

பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ் வரலாற்று சாதனை படைத்தார். நேற்றுக்காலை நடந்த 4X100 மீற்றர் மெட்லே ரிலே நீச்சலில் அவர் தங்கம் வென்றார்.

பீஜிங் ஒலிம்பிக்கில் பெல்ப்ஸ் பெற்ற 8-வது தங்கம் இதுவாகும்.

அவர் ஏற்கனவே 400 மீற்றர் தனிநபர் மெட்லே, 4X100 மீற்றர் பிரிஸ்டைல், 200 மீற்றர் பிரிஸ்டைல், 200 மீற்றர் பட்டர்பிளை, 4X200 மீற்றர் பிரிஸ்டைல், 200 மீற்றர் தனிநபர் மெட்லே, 100 மீற்றர் பட்டர்பிளை ஆகிய பிரிவுகளில் தங்கப் பதக்கம் வென்றிருந்தார்.

8 தங்கம் வென்றதன் மூலம் பெல்ப்ஸ் புதிய உலக சாதனை படைத்தார். ஒரு ஒலிம்பிக்கில் இது வரை யாரும் 8 தங்கம் வென்றது கிடையாது. பெல்ப்ஸ் 8 தங்கம் வென்று புதிய ஒலிம்பிக் வரலாறு படைத்தார்.


1972ஆம் ஆண்டு மூனிச் ஒலிம்பிக்கில் அமெரிக்க நீச்சல் வீரர் மார்க் ஸ்பிட்ஸ் 7 தங்கம் வென்றிருந்தார். இதுவே உலக சாதனையாக இருந்தது.

36 ஆண்டு கால சாதனையை பெல்ப்ஸ் நேற்று முறியடித்து ஒலிம்பிக் வரலாற்றில் புதிய உலக சாதனை படைத்தார். 23 வயதான பெல்ப்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் 14 தங்கம் வென்றுள்ளார்.

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் அவர் 6 தங்கப்பதக்கம், 2 வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியிருந்தார்.

ஆக மொத்தம் ஒலிம்பிக்கில் அவர் 16 பதக்கம் பெற்றுள்ளார். பெல்ப்ஸ், ஆரோன், ஹான் சென், ஜேசன் லேசக் ஆகியோர் அடங்கிய அமெரிக்க அணி 4X100 மீற்றர் மெட்லி தொடர் நீச்சல் போட்டியில் பந்தய தூரத்தை 3 நிமிடம் 29.34 வினாடியில் கடந்தது. இது உலக சாதனையாகும்.

இதற்கு முன்பு அமெரிக்க அணி



3 நிமிடம் 30.68 வினாடியில் கடந்ததே உலக சாதனையாக இருந்தது.

பீஜிங் ஒலிம்பிக்கில் 8 தங்கம் வென்று புதிய வரலாறு படைத்த பெல்ப்ஸ் 7 உலக சாதனையை முறியடித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த பிரிவில் அவுஸ்திரேலியாவுக்கு வெள்ளியும் ஜப்பானுக்கு வெண்கலமும் கிடைத்தன.

# உலகின் அதிவேக பெண்ணானார் ஜமேக்காவின் ஷெல்லி ஆன் பிராசர்

## 3 பதக்கங்களும் ஜமேக்காவுக்கே

பீஜிங் ஒலிம்பிக்கில் 100 மீற்றர் ஓட்டத்தில் ஜமேக்காவின் மின்னலென ஓடிய ஷெல்லி ஆன் பிராசர் தங்கப் பதக்கம் வென்றதுடன் உலகின் அதிவேக் பெண் என்ற சிறப்பையும் பெற்றார்.

நேற்றிரவு நடைபெற்ற பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் ஜமேக்காவின் ஷெல்லி ஆன் பிராசர் தூரத்தை 10.78 வினாடிகளில் கடந்து தங்கப் பதக்கத்தையும் இதே பிரிவில் சக நாட்டு வீராங்கனைகளான சிரோன் சிம்ப்ஸன் மற்றும் ஹெர்ரோன் ஸ்ரிவோட் ஆகியோர் தூரத்தை 10.98 வினாடிகளில் ஓடி முடித்து முறையே வெள்ளிப் பதக்கத்தையும் வெண்கலப் பதக்கத்தையும் வென்று ஒலிம்பிக் வரலாற்றில் 100 மீற்றர் ஓட்டத்தில் ஒரு போட்டியில் ஒரே நாடு 3 பதக்கங்களை வென்று வரலாற்றுச் சாதனையை 96 ஆண்டுகளின் பின் படைத்துள்ளனர்.

இதற்கு முன்பு 1912 ஆம் ஆண்டு ஸ்ரோக்லோமில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் 100 மீற்றர் ஆண்கள் பிரிவில் அமெரிக்க வீரர்கள் ஒரே போட்டியில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்றிருந்தமையே முன்னைய சாதனையாகும்.

எனினும் ஒரே நாட்டு வீராங்கனைகள் மூன்று பதக்கங்களையும் சுவீகரிப்பது இது 6-வது தடவையாகும். நேற்று முன்தினம் நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டம் ஆண்கள் பிரிவில் ஜமேக்கா வீரர் உசைன் போல்ட் தங்கப் பதக்கம் வென்ற நிலையில் பெண்கள் பிரிவிலும் தங்கம் வென்று ஜமேக்கா வீராங்கனை அசத்தியுள்ளார்.

ஒலிம்பிக் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் தங்கம் பெறும் வீராங்கனை




உலகின் அதிவேகப் பெண் என்று அழைக்கப்படுவார் எனவே ஜமேக்காவின் ஷெல்லி ஆன் பிராசர் உலகின் அதிவேகப் பெண் என்ற சிறப்பைப் பெற்றுள்ளார்.

# பெண்கள் மரதன் ஓட்டம்; ருமேனியாவுக்கு தங்கம்



பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் நேற்றுக் காலை பெண்களுக்கான மரதன் ஓட்டம் நடைபெற்றது. இதில் ருமேனியா வீராங்கனை கானஸ்தாண்டினா தங்கப்பதக்கம் பெற்றார்.

அவர் பந்தய தூரத்தை 2 மணி 26 நிமிடம் 44 விநாடியில் கடந்தார். ஒலிம்பிக்கில் அவர்பெற்ற முதல் தங்கம் இதுவாகும்.

38 வயதான கானஸ்தாண்டினா டோ மேசூ ஒரு குழந்தைக்கு தாயாவார். உலக சம்பியனான கென்ய வீராங்கனை கேத்ரின் டெரிபா வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

அவர் பந்தய தூரத்தை 2 மணி 27 நிமிடம் 6 விநாடியில் கடந்தார்.

சீனாவைச் சேர்ந்த ஜிகோஷ 2 மணி 27 நிமிடம் 7 விநாடியில் கடந்து வெண்கலப் பதக்கம் பெற்றார்.

# பதக்கப் பட்டியல்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 35 | 13 | 13 | 61 |
| அமெரிக்கா | 19 | 21 | 25 | 65 |
| பிரித்தானியா | 11 | 6 | 6 | 21 |
| ஜேர்மனி | 9 | 6 | 3 | 18 |
| அவுஸ்திரேலியா | 8 | 10 | 11 | 29 |
| கொரியா | 8 | 9 | 5 | 22 |
| ஜப்பான் | 8 | 5 | 7 | 20 |
| ரஷ்யா | 7 | 12 | 12 | 31 |
| இத்தாலி | 6 | 6 | 6 | 18 |
| உக்ரைன் | 5 | 3 | 6 | 14 |
| பிரான்ஸ் | 4 | 4 | 12 | 25 |
| ரோமானியா | 4 | 1 | 3 | 8 |
| ஸ்பெயின் | 3 | 2 | 1 | 6 |
| சுலோவாக்கியா | 3 | 1 | - | 4 |
| நெதர்லாந்து | 2 | 4 | 4 | 10 |
| போலந்து | 2 | 3 | 1 | 6 |
| செக்குடியரசு | 2 | 3 | - | 5 |
| ஜமேக்கா | 2 | 2 | - | 4 |
| கனடா | 2 | 1 | 4 | 7 |
| வடகொரியா | 2 | 1 | 3 | 6 |
| நியூசிலாந்து | 2 | 1 | 2 | 5 |
| எதியோப்பி | 2 | 1 | - | 3 |
| சுவிட்சர்லாந்து | 2 | - | 3 | 5 |
| ஜேமுர்ஜியா | 2 | - | 1 | 3 |
| கியூபா | 1 | 3 | 4 | 8 |
| கஜகஸ்தான் | 1 | 3 | 4 | 8 |
| சிம்பாவே | 1 | 3 | - | 4 |
| அஜர்பைஜான் | 1 | 2 | 2 | 5 |
| நோர்வே | 1 | 2 | 1 | 4 |
| இந்தோனேசியா | 1 | 1 | 3 | 5 |
| சுலோவேனியா | 1 | 1 | 2 | 4 |
| பல்கேரியா | 1 | 1 | 1 | 3 |
| பின்லாந்து | 1 | 1 | 1 | 3 |
| மொங்கோலியா | 1 | 1 | - | 2 |
| பிரேஸில் | 1 | - | 4 | 5 |
| டென்மார்க் | 1 | - | 3 | 4 |
| கமரூன் | 1 | - | - | 1 |
| இந்தியா | 1 | - | - | 1 |
| தாய்லாந்து | 1 | - | - | 1 |
| தனிசியா | 1 | - | - | 1 |
| ஹங்கேரி | - | 4 | 1 | 5 |
| பெலாரஸ் | - | 3 | 7 | 10 |
| சுவீடன் | - | 3 | - | 3 |
| கென்யா | - | 2 | 1 | 3 |
| துருக்கி | - | 2 | 1 | 3 |
| ஆஸ்திரியா | - | 2 | 1 | 3 |
| கிரீஸ் | - | 1 | 2 | 3 |
| அல்ஜீரியா | - | 1 | 1 | 2 |
| கொலம்பியா | - | 1 | 1 | 2 |
| குரோசியா | - | 1 | 1 | 2 |
| கர்கிஸ்தான் | - | 1 | 1 | 2 |
| செர்பியா | - | 1 | 1 | 2 |
| உஸ்பெகிஸ்தான் | - | 1 | 1 | 2 |
| சிலி | - | 1 | 1 | 1 |
| ஈகுவடார் | - | 1 | - | 1 |
| எஸ்தோனியா | - | 1 | - | 1 |
| மலேசியா | - | 1 | - | 1 |
| சிங்கப்பூர் | - | 1 | - | 1 |
| ரினிடிடாட் | - | 1 | - | 1 |
| வியட்நாம் | - | 1 | - | 1 |
| ஆர்மேனியா | - | - | 5 | 5 |
| சீனா தைபே | - | - | 2 | 2 |
| ஆர்ஜென்டினா | - | - | 1 | 1 |
| எகிப்து | - | - | 1 | 1 |
| லிதுனியா | - | - | 1 | 1 |
| மெக்ஸிக்கோ | - | - | 1 | 1 |
| தஜிகிஸ்தான் | - | - | 1 | 1 |
| ரூகோ | - | - | 1 | 1 |




# இலங்கை-இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி இன்று

(தம்புள்ள)

இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையே 3 டெஸ்ட் போட்டி தொடரை இலங்கை அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்தியா-இலங்கை அணிகள் இடையேயான 5 ஒருநாள் போட்டி தொடரில் முதல் ஆட்டம் தம்புள்ளையில் இன்று பகல் ஆரம்பமாகின்றது.

டெஸ்ட் தொடரை இழந்ததால் ஒருநாள் தொடரை கைப்பற்ற வேண்டிய நெருக்கடி இந்திய அணிக்கு ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் நடந்த ஆசியக் கோப்பை இறுதிப்போட்டியில் இந்திய அணி 100 ஓட்டங்களால் இலங்கையிடம் தோல்வியடைந்தது. இதற்கு பழிவாங்கும் வகையில் ஆடவேண்டிய நிலை இந்தியாவுக்கு உள்ளது.

டெஸ்ட் தொடரில் ஆதிக்கம் செலுத்திய இலங்கை சுழற்பந்து வீச்சாளர்கள் மெண்டிஸ், முரளிதரன் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு சவாலாக இருப்பார்கள்.

தோனி தலைமையிலான இந்திய அணி புதிய தெம்புடன் இலங்கையைச் சந்திக்கிறது. பயிற்சி ஆட்டத்தில் பெற்ற அபாரமான வெற்றி இந்தியாவுக்கு கூடுதல் பலமாக இருக்கும்.

பயிற்சி ஆட்டத்தில் யுவராஜ் சிங் ஆதிக்கம் செலுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(5)

## பாலா

### ஆஸி.மகளிர் சாதனை

(பீஜிங்)

4X100 மீற்றர் மெட்லி தொடர் நீச்சலில் அவுஸ்திரேலிய மகளிர் அணி உலக சாதனை படைத்தது. எமிலி, ஜோன்ஸ், ஜெசிக்கா, ஷரிக்கெட் ஆகியோர் அடங்கிய அவுஸ்திரேலிய அணி பந்தய தூரத்தை 3 நிமிடம் 52.69 வினாடியில் கடந்தது.

இதற்கு முன்பு அந்த அணி 3 நிமிடம் 55.74 வினாடியில் கடந்ததே சாதனையாக இருந்தது.

இப்பிரிவில் அமெரிக்காவுக்கு வெள்ளியும், சீனாவுக்கு வெண்கலமும் கிடைத்தன.

# வன்னிப் பகுதி மக்களுக்கு உதவுமாறு கிழக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை

(மட்டக்களப்பு)

வன்னிப் பிரதேசத்தில் தொடரும் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்வுக்குள்ளாகியிருக்கும் மக்களின் துயர் துடைக்கக் கிழக்கு மாகாண சபை அவசர மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வர வேண்டும் என முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் கோரிக்கை ஒன்று முன் வைக்கப்பட்டுள்ளது.

இக் கோரிக்கையை முன்வைத்து கடிதம் ஒன்றை தமிழ் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினரான இரா.துரைரத்தினம் அனுப்பிவைத்துள்ளார்.

வன்னிப் பிரதேசத்தில் ஏற்கனவே இடம்பெயர்ந்தவர்களும் நிரந்தர வசிப்பாளர்களும் என ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இடம்பெயர்வுக்குள்ளாகி அல்லல்படுவதாகவும் உணவு, உடை, குழந்தைகளுக்கான பால்மா உட்பட இவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை அனுப்பி வைப்பது குறித்து அக் கடிதத்தில் தான் முதலமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளதாக அவர் பி.பி.சிக்குத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு மக்களை வெளியேற விடாமல் விடுதலைப்புலிகள் தடுத்து மனிதக் கேடயமாகப் பயன்படுத்துவார்களானால் அது கண்டிக்க வேண்டியது என்றும் அதேபோல் மக்கள் குடியிருப்புப் பகுதி மீது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களினால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (எ-5)

# வன்னியில் இடம்பெயர்வு காரணமாக
# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு 607 மாணவர்கள் தோற்றவில்லை

இராணுவத்தின் எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக கிளிநொச்சி வலயத்தின் பூநகரிப் பாடசாலைகளைச் சேர்ந்த 607 மாணவர்கள் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவில்லை என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் 19 மாணவர்களும் அக்கராயன் மகாவித்தியாலயத்தில் 25 மாணவர்களும் ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் 24 மாணவர்களும் வேரவில் மகா வித்தியாலயத்தில் 24 மாணவர்களும் பூநகரி மகா வித்தியாலயத்தில் 22 மாணவர்களும் முழங்காவில் மகா வித்தியாலயத்தில் 65 மாணவர்களும்,

நாச்சிக்குடாப் பாடசாலையில் 70 விழுக்காடு 40 மாணவர்களும் இயக்கச்சிப் பாடசாலையில் 26 மாணவர்களும் புலமைப் பரிசில் தேர்வில் தேர்வு எழுதவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இடப்பெயர்வு மற்றும் பரீட்சை நிலையங்களின் மாற்றங்கள் போன்றவற்றால் மாணவர்கள் தேர்வுக்குக் குறைவாக வந்தமைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இடம்பெயர்வு காரணமாக அவர்கள் தேர்வுக்கான ஆயத்த நிலையில் இல்லாததும் காரணமாகக் குறிப்பிடப்படுகின்றது. (எ-5)

## அடிப்படை வசதிகள் எது...

சத்தில் தொடரும் இடம் பெயர்வு காரணமாகக் கிளிநொச்சி மாவட்டத்தின் மக்கள் தொகை அதிகரித்ததையடுத்து அதற்கேற்ற வகையிலான வைத்திய தேவைக் குரிய மருந்துப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின் றது.

இங்கு வந்திருப்போருக்கான மருந்துகளை வழங்குவதற்குத் தற்போது கையிருப்பிலுள்ள மருந்துகளைப் பயன்படுத்துகின்றோம். எனினும் சில மருந்துகள் எங்களிடம் கையிருப்பில் இல்லை.

இது சம்பந்தமாக நாங்கள் சுகாதார திணைக்களத்திடம் அவசரமாக ஒரு தொகுதி மருந்துத் தொகுதியை அனுப்பி வைக்குமாறு கேட்டிருக்கின்றோம்.

கிளிநொச்சி மாவட்டத்திற்குரிய எரிபொருள் விநியோகத்திற்குரிய தடங்கல்கள், குறைப்புக்கள் காரணமாகக் கிளிநொச்சி வைத்திய சாலையின் அத்தியாவசிய பணிகளை சீராக மேற்கொள்ள முடியாத நெருக்கடி நிலை ஒன்று உருவாகியிருக்கின்றது.

கடுமையான நோய், கடுமையான காயங்களுக்கும் சிகிச்சைக்காக நோயாளிகளை வவுனியாவுக்கு அனுப்ப வேண்டியிருக்கின்றது. எரிபொருள், பற்றாக்குறை காரணமாக அம்புலன்ஸ் வண்டியை தினசரி அனுப்ப முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த மாதம் எங்களுக்குரிய டீசல் அனுமதிக்கப்படாததன் காரணத்தினால் நாங்கள் 18 மணித்தியாலங்கள் மாத்திரம் மின்சாரத்தினை வழங்குகின்றோம். இதன்போது மருந்துகள், தடுப்பூசி போன்ற குளிர்சாதனப் பெட்டியில் இருக்கும் பொருள்கள் பழுதடையக் கூடிய அபாயம் காணப்படுகின்றது.

இந்த நிலைமை பற்றி பல முறை நாங்கள் மத்திய சுகாதார அமைச்சுக்கும் மாகாண சுகாதார அமைச்சுக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திற்கும் தெரியப்படுத்தியிருக்கின்றோம்.

அவர்கள் அனைவரும் இது பாதுகாப்பு அமைச்சின் முடிபு என்பதால் தாங்கள் இதில் தலையிட முடியாது என்று கூறியிருக்கின்றார்கள். வன்னிப் பிரதேசத்தில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து கொண்டிருக்கும் மக்கள் சொல்லொணாத் துயரங்கள், கஷ்டங்களுக்குள்ளாக நேரிட்டிருக்கின்றார்கள் என்றார். (ச)

## 60 வயதுக்கு மேற்பட்டவர்...

ஆகியோர் கலந்து கொண்டதுடன்,

இராணுவத் தரப்பில் யாழ்.இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரிசிறி, பிரதேச இராணுவ பிரிகேட் தளத் தளபதிகள், வடமாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.எஸ்.யூ.பெர்னாண்டோ, வட பிராந்திய கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் ரி.எஸ்.வி.சமரசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின்போது யாழ்.மாவட்டத்தின் சிவில் நிர்வாகக் கட்டமைப்புக்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இச் சந்திப்பில் கருத்துரைத்த யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா,

60 வயதுக்கு மேற்பட்டவர்களும் பயணப் பாதுகாப்பு அனுமதி (கிளியறன்ஸ்) பெற வேண்டியிருப்பதால் அவர்கள் பெரும் அசௌகரியங்களுக்குட்படுகின்றனர். எனவே அவர்களுக்கான பயணப் பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறையை நீக்க வேண்டும்.

அத்துடன் ஏனையவர்களும் பயணப் பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு இராணுவ முகாம்களுக்கு அலைய வேண்டிய நிலையே காணப்படுகின்றது. குறிப்பாக இராணுவ சிவில் நிர்வாக காரியாலயத்தில் அலுவலகர் இல்லை, பயணப் பாதுகாப்பு அனுமதி செய்யப்படவில்லை போன்ற காரணங்களைக் கூறிப் பொதுமக்களை இராணுவத்தினர் அலைச்சலுக்கு உள்ளாக்குகின்றனர்.

எனவே பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்குவது தொடர்பில் ஒரு சீரான ஒழுங்கமைப்பின் கீழ்,பொதுமக்களுக்கு அசௌகரியங்களை உண்டு பண்ணாமல் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இராணுவத் தளபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இதற்குப் பதிலளித்த யாழ்.இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் பயணப் பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறை நீக்கப்பட்டு முன்பிருந்த கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் அவர்கள் வெளி மாவட்டங்களுக்குப் பயணிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

அத்துடன் ஏனையவர்களுக்கான பயணப் பாதுகாப்பு அனுமதி எனது நேரடிக் கட்டுப்பாட்டில் சிரமமின்றி 10 நாள்களில் வழங்கப்படும் எனக் குறிப்பிட்டார். இந்த நடைமுறைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்குமாறு யாழ். இராணுவக் கட்டளைத் தளபதி சந்திப்பில் கலந்து கொண்ட பிரதேச இராணுவப் பிரிகேட் தளத் தளபதிகளுக்குக் கட்டளையிட்டார்.

எனவே எதிர்வரும் காலப் பகுதியில் பொது மக்கள் வெளிமாவட்டங்களுக்குப் பயணிப்பதற்கான பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டும் தமது ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு இராணுவ சிவில் காரியாலயத்திற்குச் சென்றால் பின்னர் 10 நாள்களுக்குள் வழங்கப்படும் தினத்திற்குச் சென்று பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் அவசர தேவைகள், உத்தியோகபூர்வ தேவைகளுக்காக வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்காக உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும்போது 48 மணி நேரத்தில் பாதுகாப்பு பயண அனுமதி வழங்கப்படும் எனவும் யாழ்.இராணுவக் கட்டளைத் தளபதி உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மீன்பிடி, விவசாயம் போன்றவற்றில் ஏற்பட்டிருக்கும் தடைகள் தளர்த்தப்பட வேண்டும் எனக் கோரியபோது இதற்குப் பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக்காட்டிய யாழ்.கட்டளைத் தளபதி அதற்கான நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (ச-5)

## மத்தியஸ்த சபையால் தீர்க்க...

'பலாலியில் நேற்று நடைபெற்ற உயர் மட்ட மாநாட்டின்போதே அவர் இவ்வறிவுறுத்தலை வழங்கியுள்ளார். இதற்கமைவாக வட மாகாணப் பிரதிப் பொலிஸ் மாஅதிபரினால் சகல பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் விரைவில் கட்டளையிடப்படவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் தற்போது பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்படும் பிணக்குகள் பொலிஸாரினால் தீர்க்கப்பட முடியாவிட்டால் மாவட்ட நீதிமன்றத்திற்கு வழக்குகள் கொண்டு செல்லப்படுகின்றது.

இனி வரும் காலப் பகுதியில் குடாநாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்குக் கிடைக்கும் பிணக்குகள் முதலில் மத்தியஸ்த சபைகளில் ஆற்றுப்படுத்தப்பட்டு தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

இதில் மத்தியஸ்த சபைகளின் 7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள 2 ஆம் அட்டவணைக்கு அமைவாகப் பிணக்குகள் 25 ஆயிரம் ரூபாய்க்குட்பட்ட தண்டனையுடையது மற்றும் குடியியல் பிணக்குகள், குற்றவியல் பிணக்குகள் என்பவை அடங்குகின்றன.

அவ்வாறு ஆற்றப்படுத்தப்படும் பிணக்குகள் அல்லது தவறுகளை மத்தியஸ்த சபைகளினால் பிணக்குக்காரர்களைச் சுமுகமான தீர்வொன்றுக்குக் கொண்டு வர முடியாவிட்டால் மத்தியஸ்த சபைகளினால் தீர்க்கப்படவில்லை எனச் சான்றிதழ் வழங்கப்பட்டால் மாத்திரமே முதல் நிலை நீதிமன்றங்களான மாவட்ட நீதிமன்றங்களில் வழக்கு ஏற்றுக் கொள்ளப்படும் என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா வட மாகாண பிரதிப் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதனூடாகவே குடாநாட்டில் நீதி, நிர்வாகத்தைச் சீராக மேம்படுத்த முடியும் எனவும் மேல் நீதிமன்ற நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## உணவு...

தோட்டத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உணவு உட்கொண்ட பின்னரே தமக்குச் சுகவீனம் ஏற்பட்டதாக மக்கள் தெரிவித்தனர். வைத்தியசாலையில் தற்போது 77 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாக ஊவா பரணகம வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அத்தியட்சகர் எம்.ரி.பி. திஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர்களில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது என அவர் குறிப்பிட்டார். மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் தொற்று நோய்ப் பிரிவின் உதவியுடன் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் மாவட்ட வைத்திய அத்தியட்சகர் தெரிவித்தார். (ச)

## புலிகளின்...

சதுரமீற்றர் பரப்பளவு கொண்ட 4 கட்டடங்களும் 100 பதுங்குகுழிகளும் 35 கழிப்பறைகளும் இருப்பதாகவும் இந்தப் பகுதியில் உயிரிழந்த விடுதலைப்புலிகள் 69 பேரின் கல்லறைகள் காணப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் தனது இணையத் தள அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

எனினும் இது குறித்து விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து தகவல்கள் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை.

வவுனியா பாலமோட்டை, துணுக்காய், வெலிஓயா ஆகிய களமுனைகள் உட்பட்ட வன்னிப் போர் முனைகளில் கடந்த சனிக் கிழமை இடம்பெற்ற மோதல்களில் 38 விடுதலைப்புலிகளும் 5 இராணுவத்தினரும் கொல்லப்பட்டிருப்பதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் தெரிவித்திருக்கின்றது. (ச-5)

## வவுனியா...

இத் தாக்குதலில் படைத் தரப்பில் இழப்புக்கள் ஏற்பட அவர்கள் பின் வாங்கிச் சென்றனர். இதில் 11 படையினர் கொல்லப்பட்டனர். 19 பேர் காயமடைந்தனர் என புலிகள் தெரிவித்துள்ளனர். (எ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி வின்சன் டீ போல் பிலோமினா (பேபி)



கடற்கரை வீதி, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி வின்சன் டீ போல் பிலோமினா (பேபி) 17.08.2008 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் வின்சன் டீ போல் (கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், பருத்தித்துறை) அவர்களின் அன்பு மனைவியும், அலெக்ஸ் போல் (பிரான்சிஸ் ரேடஸ் உரிமையாளர், பருத்தித்துறை), லூயிஸ் போல் (கனடா), றொபேட் போல், ஜேக்கப் போல் (கனடா), பீற்றர் போல் (லண்டன்), எட்மன் போல் (நியூ வின்சன் ரேடஸ், கொழும்பு), றெக்ஸ் போல் (வின்சன் ரேட் சென்ரர், பருத்தித்துறை), டக்ளஸ் போல் (பிரான்சிஸ் ரேடஸ், யாழ்ப்பாணம்), டிலாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும்.ஆவார்.இவரது ஈமக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

கடற்கரை வீதி, பருத்தித்துறை.

T.P. No. 226 3129 (1609) - குடும்பத்தினர்


திருவிழாக் காலத்தில் சிறுவரின் பெருவிழா

'சிறுவர் பிருந்தாவனம்'

இடம் :- யா/நல்லூர் மங்கயற்கரசி வித்தியாலயம்.
காலம் :- 07.08.2008 முதல்
நேரம் :- தினமும் பி.ப. 2.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை

கண்காட்சி, சிறுவர்களுக்கான உள்ளக விளையாட்டுக்கள், படக் காட்சிகள், சிறுவர் நாடகங்கள் இன்னும் பல மகிழ்வூட்டல் நிகழ்வுகள் காத்திருக்கின்றன.

அனைவரும் அணிதிரண்டு வாரீர்

அனுமதி இலவசம்

(608)

அனுசரணை :- SOND

அமைப்புக்குழு,
யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.